48

48
2.59

# இலக்கியப் படைப்பு

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
APR 1959
MADRAS



C

மணி நிலையம்

O-,63
N59
106242

சுப்பிரமணியன்.

# இலக்கியப் படைப்பு

(முதற்பாகம்)

வித்துவான்

நெல்லை, க. சுப்பிரமணியன்

தலைமைத் தமிழாசிரியர்,

பேரன்புருக் உயர்நிலைப்பள்ளி,

சுரண்டை.

மணி நிலையம்

வேம்படித் தெரு ❋ திருநெல்வேலி நகர்.

எந்தை இணையடி நிழலில்
இந் நூல்
படைக்கப் படுகிறது.

MADRAS

தனிமையின் இனிமை, அவ்வையார், புதினப் படிப்பு என்னும் மூன்று கட்டுரைகளையும் முன்னமே வெளியிட்ட "செந்தமிழ்ச்செல்வி" இதழாசிரியர்க்கும், இந்நூலை நன்முறையில் அச்சிட்டுதவிய ஜோதி அச்சக உரிமையாளர்க்கும் நிரம்ப நன்றி.

—ஆசிரியர்.

'T is pleasant to see one's name in print;
A Book's a book, although there's nothiug
in it.

—Lord Byron.

# பொருளடக்கம்.


| | | பக்கம் |
|---|---|---|
| க. | இளமைப் பருவம் | 1 |
| உ. | நூல் நிலையம் | 5 |
| ங. | நாட்டுப்புறம் | 9 |
| ச. | செய்தித் தாள் | 19 |
| ரு. | தனிமையின் இனிமை | 28 |
| சு. | இலக்கியப் படைப்பு | 32 |
| எ. | இலக்கியப் படிப்பு | 37 |
| அ. | இலக்கியத் தொடர்பு | 42 |
| கூ. | புத்தகப் படிப்பு | 46 |
| ௰. | அவ்வையார் | 52 |
| கக. | புதினப் படிப்பு | 54 |
| கஉ. | மேடைப் பேச்சு | 56 |
| கங. | தமிழ் உரைநடை | 60 |
| கச. | இலக்கிய நடை | 64 |
| கரு. | உரைப் பாட்டுநடை | 70 |

# புறநானூறு

## (தொடித்தலை விழுத்தண்டினார் பாடியது)

இனிநினைந்து இரக்கம் ஆகின்று, திணிமணல்
செய்வுறு பாவைக்குக் கொய்பூத் தைஇத்
தண்கயம் ஆடும் மகளிரொடு கைபிணைந்து
தழுவுவழித் தழீஇத் தூங்குவழித் தூங்கி
மறையெனல் அறியா மாயமில் ஆயமொடு
உயர்சினை மருதத் துறையுறத் தாழ்ந்து
நீர்கணிப் படிகோடு ஏறிச் சீர்மிகக்
கரையவர் மருளத் திரையகம் பிதிர
நெடுநீர்க் குட்டத்துத் துடுமெனப் பாய்ந்து
குளித்துமணற் கொண்ட கல்லா இளமை
அளிதோ தானே, யாண்டுண்டு கொல்லோ?
தொடித்தலை விழுத்தண்டு ஊன்றி நடுக்குற்று
இருமிடை மிடைந்த சிலசொல்
பெருமூதாளரேம் ஆகிய எமக்கே.

குறிப்பு:- இளமைக் காலத்துச் செய்தன செய்யமாட்டாது இளிவந்தனம் இக்காலத்து என்றமையின் தன்கண் தோன்றிய மூப்புப் பொருளாக இளிவரல் பிறந்தது.

விளக்கம்: இளமைப் பருவம் என்னும் கட்டுரை.

# இளமைப் பருவம்

ஆண்டு பலவாகிப் பெரிய முதியவராக இருக்கும் ஒருவர், தம் இளமைப் பருவத்தின் செயல்களை எண்ணி இரங்குகின்றார். அவர், கூன் விழுந்து, பல் கழன்று, விழி மழுங்கி, என்பு எழுந்து இயங்கும் யாக்கையராக இருக்கின்றார். அதனால், பூண்போட்ட தண்டு ஒன்றைக் கையில் பிடித்து, நிலத்தில் ஊன்றி கடுக்கத்துடன் நடந்து செல்கின்றார். பெருஞ் சாத்தனோடு பேசிக்கொண்டிருக்கும் போது, பல சொல்லக் காமுறுவார்; எனினும், சில சொல்லும் ஆற்றலே அவரிடம் காணப்படும். அங்ஙனஞ் சிற்சில கழறும்போதும், இருமல் இடையிடையே தோன்றித் தடையாய் நிற்கும், தள்ளாடித் தள்ளாடி நடக்கும் அந்தச் செந்தமிழ்க் கிழவர், தடுமாறித் தடுமாறிச் சில சொல்லிக்கொண்டிருந்தவர், "கல்லா இளமை யாண்டுண்டு கொல்லோ?" என்று ஏங்கிய நிலையில் முடித்து விட்டார்.

ஒல்லையூர் என்பது, அந்த நல்லிசைப் புலவர் வாழும் பதியாகும். அங்கே ஆழமான குளம் ஒன்று இருந்தது, குளக்கரையில் நின்ற மருத மரம், கவையாகிக் கொம்பாகி இலை தழைகளோடு ஓங்கி வளர்ந்து காணப்பட்டது. அந்த மரத்தின் ஒரு கொம்பு, குளத்து நீருக்குமேல் நீட்டிக் கொண்டிருந்தது. அம் மரத்தை அடுத்துக் குளத்தில் குளிப்பவர்களுக்கு வசதியான நீர்த்துறை அமைந்திருந்தது. ஆங்கு ஆடவரும் மகளிரும் வந்து குளிப்பதும், நீர் முகந்து

கொண்டு செல்வதும் உண்டு. ஆனால், துள்ளி விளையாடும் பிள்ளைகளுக்கு, அந்தத் துறை நீரும் நிழலும் பொருந்தித் திகழ்ந்த காரணத்தால், அழகின் உறைவிடமாகவும், மகிழ்ச்சியின் இருப்பிடமாகவும் தோற்றம் அளித்தது.

பத்துப் பன்னிரண்டு ஆண்டும் நிரம்பாத இளம் பருவத்துப் பிள்ளைகள் எல்லாரும், சேர்ந்து விளையாடுவதும் குதிப்பதும் நீரில் குளிப்பதும் அந்தக் குளக்கரையில் நாள்தோறும் காணும் காட்சிகளாகும். இத்தகைய இளமை நிலையில் இருக்கும் இச் சிறுவர்கள், தங்கள் பின்றைக்கால வாழ்க்கையைப் பற்றி நீள நினைந்து பார்ப்பதே இல்லை; இவர்களுடைய நினைவுஞ் சொல்லுஞ் செயலும் எல்லாம், நாற்புறமுஞ் சுழன்று வீசுங் காற்றினைப் போல்வனவேயாகும். பதினெட்டு இருபது ஆண்டு அணுகும்போதுதான், ஆடவன் எதிர் காலத்தை எண்ணித் துணிந்து செயலில் இறங்க மூற்படுகின்றான். எனவே, விளையாடும் இயல்பு பெரிதும் அமைந்திருக்கின்ற இளைஞர்கள், குளக்கரையில் சிறிது களிமண்ணை எடுத்துப் பிசைந்து, அதை, ஒரு பொம்மை போன்ற வடிவு பெறும் வண்ணம் செம்மையாய்ச் செய்கிறார்கள். இந்தக் களிமண் பாவையை உண்மையான உருவமாக எண்ணி இன்புறுகின்றன, அந்தச் சிறுவர் சிறுமியர்களின் உள்ளங்கள்; அதனால், அதனை அழகு படுத்தக் கருதி, அருகிலுள்ள மணங் கமழ் மலர் பறித்துக் கொண்டு வந்து சூட்டி மகிழ்கிறார்கள்.

ஆணும் பெண்ணும் மனங் கலந்து உடல் கலந்து வாழும் வாழ்வின் நிலையை அந்தப் பருவத்தில் இளைஞர்கள் நன்கறிந்திருக்க மாட்டார்கள். பெரும்பாலும், இளைஞர் உள்ளம்

மாசற்றிருக்கும்; ஒளிவு மறைவு ஏதும் இல்லாமல் இருக்கும்; உள்ளதை உரையால் வெளிப்படுத்தும் நிலையில் இருக்கும். எனவே, சின்னஞ் சிறிய பிள்ளைகள் எல்லாரும், சிறுவனும் சிறுமியுமாய்க் கைகோத்து நீரில் குதிக்கிறார்கள்; ஒருவரோ டொருவர் பொருந்தி விழுகிறார்கள்; அசைந்து விலகி நின்று ஆடுகிறார்கள்.

சிறுவர் சிலர், தண்ணீரைத் தொட்டுக் கொண்டிருக்கும் மருதமரத்தின் கிளையில் ஏறி நின்று, இளமையின் விளையாட்டு, இயல்பு விளங்குமாறு, தண்ணீரில் 'துடும்' எனப் பாய்கிறார்கள். இந்த ஒலியைக் கேட்டுக் கரையில் ஆடை தப்பிக் கொண்டிருக்கும் அஞ்சிய நெஞ்சினர் சிலர், மருண்டு நோக்குகிறார்கள். நீர்த்திரையோ, வட்டவட்டமாய்ப் பரவுகிறது; கரையிலே சென்று மோதுகிறது. இவ்வாறு நீரில் பாய்ந்த இளைஞர், "ஆழம், ஆள்முழுக்கும்" ஆதலால், கரையை நோக்கி நீந்தி வருகிறார்கள். ஓரிருவர், நீருள் மூழ்கித் தரையைத் தொட்டு, மண் கொண்டுவரத் தீர்மானித்து, அதனை எடுப்பதற்காக மூச்சடக்கி உள்ளே சென்று, கையில் மண்ணை எடுத்துக் கொண்டு, கரைக்கு விரைவாக வந்து கொண்டிருக்கின்றார்கள். அவர்களை எதிர் பார்த்து, இளைஞர் சிலர், நிற்கின்றனர். குளித்து மண் கொண்டுவந்த சிறுவர்களும், தம் வீரச்செயலை ஆரவாரத்துடன் பெருமிதமாகக் காட்டிக் கொள்கிறார்கள்.

வாழ்க்கையைப் பற்றிய கவலை சிறிதும் இன்றி, வருங் காலத்தின் நெடுநாள் யாத்திரைக் கான திட்டமும் வழியும் வகுக்கும் கருத்து மனத்தில் இன்றி, அடுத்த வேலை இன்னது

என்ற முடிவும் முயற்சியும் இன்றி இளமைப் பருவம் இருப்பது இயல்பே ஆகும். அப்போது, மேற் கூறியவாறெல்லாம், தாமும் எழுச்சியோடு விளையாடியே பொழுது போக்கியதை எண்ணுகின்றார், தொடித்தலை விழுத்தண்டுன்றி நடக்கும் படித்தறிவு சான்ற பழந்தமிழ்ப் புலவர். பிள்ளைப் பருவத்தின் கள்ள மில்லாத உள்ள நிலையே தமக்கு இப்போதும் இருந்தால், உடலின் தளர்ச்சியும் உலக வாழ்வின் உவர்ப்பும் ஒருசிறிதும் உள்ளங் கொள்ளாமல், மகிழ்ச்சியாக உலாவலாமே என நினைக்கின்றார். ஆனால், அத்தகைய மனநிலையை அடைவது அவ்வளவு எளிதன்று; ஆதலால், கழிந்ததற்கிரங்கிக் கவல்கின்றார். தமது நிலையைப் பெருஞ் சாத்தன் என்னும் ஒரு நண்பனிடம் இயம்பிக் காட்டுகின்றார். இந்தத் தண்டூன்று கிழவரின் தமிழ்ப்பாடல், "இனி நினைந்து இரக்கம் ஆகின்று" என்று தொடங்குவது புறநானூறு என்னும் இலக்கியத்தில் இருக்கின்றது.

# நூல் நிலையம்

பெரும் பயன்தரும் சிறந்த நூல்களெல்லாம் நல்லறிவின் களஞ்சியங்கள்; ஆதலால், அவை ஒருங்கு திரட்டப் பட்டு நிரந்தினிது காணப்படும் நூல்நிலையம், அறிவொளி பரப்பும் அரும்பணி புரிகின்றது என்று சொல்லலாம். படிப்பார்வம் இருந்தும் பணங் கொடுத்து நூல்களை வாங்கும் வசதி யற்றவர்களுக்குப், பொது நூல் நிலையம், அறிவு மலர்ச்சி ஏற்பட்ட இடங்கள் எங்கணும் நின்று பயன்படுகின்றது. அதுவன்றியும், மன ஒருமையுடன் ஒரு புத்தகத்தைப் படித்துக் கொண்டிருக்கும் ஒருவன், தனது வீட்டில் நிகழுஞ் சில சிறு செயல்களால் நினைவு இடையறுந்து, பல வேறு வகையால் படிப்பு முயற்சி தடைபெறுதலை நாம் நாள் தோறும் கண்டுவருகின்றோம் அன்றோ? இவ்வாறு வீடுகளிற் படிக்கும் இளைஞர்க்குத், தொடர்ந்து இடர்ப்பாடு செய்யும் சூழ்நிலைகளைப் பொது நூல்நிலையம், தன்கண் கொண்டு காணப்படுதல் சிறிதும் இல்லை; ஆகலின் அஃது அவர்க்கு எவ்வளவு வசதியான இடமாய் அமைகின்றது! ஆ! இத் தகைய நூல்நிலையம் தெருவுதோறும் காணப்படுமானால், இத்தென்றமிழ் நாடு, அறிவு மணங் கமழ்ந்து, சங்ககாலம் போன்று தங்க காலமாகப் பொலிந்து தோன்றுமே! இது நிற்க,

நூல் நிலையங்களில் கற்கவரும் மாந்தர் எல்லாரும், கதை நூல்களையே பெரும்பாலும் காமுறுவர், கதை நூல்களைப் படிப்பவர்கள், அதனால், உலக இயற்கையினையும் மன

இயற்கையினையும் நன்கறிவதுடன், தங்களிடம் மறைவாக வுள்ள குறைகளையும் உள்ளவாறு கண்டுணர்ந்து திருந்திக் கொள்கின்றனர். ஆதலால், பொதுநூல் நிலையங்களில், பண்பு மேம்பாடும் பகுத்தறிவும் ஏற்படுவதற்கான கருத்துக் களைத் தந்துதவும் சிறந்த புதுக்கதை நூல்களையே தெரிந் தெடுத்து வாங்கி வைத்திருக்கவேண்டும். அன்றியும், அங்கே பலதிறப்பட்ட நல்ல கலை நூல்கள் அனைத்தும் தனித்தனியே காணப்படுதல் வேண்டும். இன்னும், தமிழ் நாடு, கலைக்கதிர், செந்தமிழ்ச் செல்வி முதலான இதழ்கள் எல்லாம் வந்து கொண்டிருக்க வேண்டும்.

நூல் நிலையங்களெல்லாம் படிப்பகங்களோடு இணைந் திருக்கும்; ஆகையால், இங்கு எடுத்துச் சொல்லும் கருத் துக்கள் பொதுவாகவே காணப்படும். அறிவு வளர்ச்சிக்குக் காரணமாகவுள்ள பலவகையான கருவிகளில் நூல் நிலையமும் ஒன்றாகும். பெரும்பாலாரான மக்களால் விலைகொடுத்து வாங்கமுடியாத அவ்வளவு பெரிய நூல்களான கருணாமிர்த சாகரம், சிவக சிந்தாமணி, கலைக் களஞ்சியம், மறைமலையடி கள் வரைந்த "மாணிக்க வாசகர் வரலாறுங் காலமும்" முதலியவை நூல் நிலையங்களில் இருப்பதால், நமக்கு உண் டாகும் நன்மைகள் பலவாகும். மற்றும், ஆங்கில மொழியின் கண்ணும் நமதருமைச் செந்தமிழ் மொழியின் கண்ணும் எழுந்துலவுகின்ற பலவகையான அகராதிகளையும் கலையறிவு நூல்களையும் எல்லாம், விலைக்கு வாங்கி வீட்டில் வைத்து விருப்பம்போல் கற்கலாம் என எண்ணினால், அது நம்மால் ஆகுமா? முக்கியமான பொது நூல் நிலையங்களில் இவை இருக்குமாயின், ஏழைகட்கும் ஏனையோர்க்கும் எவ்வளவோ

நலம் பயக்கும் அன்றோ? ஆகவே, நன் முறையில் நடை பெறும் நூல் நிலையமானது, வேறெங்கும் காணற்கரிய பெரிய நூல்கள் பலவற்றையும் கற்கும் மாந்தர்க்குத் தந் துதவி, அறிவுத் துறையில் முன்னணியில் நிற்கிறது.

மிகப் பெரிய பொது நூல் நிலையமானது ஒருபெருஞ் சுவடிக் களஞ்சியம் என்றே கூறலாம். கல்லூரி ஒவ்வொன் றிலும் படிப்பறையோடு திகழும் நூல் நிலையம் கட்டாயம் இருக்கும். பிரிட்டிசு மியூசியத்தின் பெரிய படிப்பு நிலைய மானது, முந்நூறு பெயர்கள் தனித்தனியே ஒருங்கு இனித்திருந்து கற்பதற்குரிய இருக்கைகளை யுடையதா யிருக்கின்றது. அரிய பெரிய நூல்களை அவ்வளவு அகன்ற அறையின் கண் அமர்ந்து அமைதியாக உற்று நோக்கிக் கற்றுக்கொண்டிருக்கின்ற படிப்பாளர்களை, ஒருவர் புதி தாகச் சென்று காண்குவராயின், அஃது, அவர்க்குப் படிப்பு ஆர்வத்தை வளர்ப்பதாகவும், அறிவு ஆழத்துடன் அமைதியாயிருக்குந் தன்மையை மிகுப்பதாகவும் புலப்படு மன்றோ?

இனி, நாடெல்லாம் கல்வி நீரோடை பாயவேண் மானால், தெருவெல்லாம் நூல் நிலையம் காட்சிதரவேண்டும். பெரிய நூல் நிலையங்களில் அரிய விலையுள்ள விழுமிய நூல்களெல்லாம் பழுதறத் திகழ்ந்து வருமாயின், அவை, எதிர்காலத்தில் வரலாற்று ஆராய்ச்சிக்கும் இலக்கிய ஆராய்ச்சிக்கும் ஒரு பெருந்துணையாகும். நிற்க,

நூல் நிலையம் அங்கு இங்கு எனாதபடி எங்குங் காணப் படும் காலம் வரினும், மிகவிழுமிய நூல்களை உண்மை

யாகவே விரும்பிப் படித்து இன்புறும் இயல்பு அமைந் தோர், இரவல் நூல்களால் மனநிறைவு அடைய மாட்டார். அத்தகையவர் புத்தகங்களை விலை கொடுத்து வாங்கிப் பத்திரமாக வைத்திருந்து, நாள்தோறும் கற்று மகிழ்வார்கள், உயர்ந்த நூல்கள் சிறந்த நண்பர்களைப் போல்வனவே ஆகும். அவற்றை எடுத்து விரித்துப் படிக்கத் தொடங்கினால், நமது சிந்தனையே சிறப்படையும். ஆகவே, பொது நூல் நிலையம், புது நூல்களையெல்லாம் தன் பால் கொண்டு திகழ்ந்தாலும், திருக்குறள் முதலிய நூல்கள் வீடுதோறும் விளங்க வேண்டும்.

நூல் நிலையம் எண்ணிக்கையில் மிகுமானால், நூல்களை விலைக்கு வாங்குவோர் தொகை குறையும் என்பதும் கருத்திற் கொள்ளவேண்டும். இந்த இடத்தில் செந்தமிழ் இளைஞர்க்கு ஒன்று நினைவு கூரற்பாற்று. வெளியே இருக்கும் நூல் நிலயத்தில், விரும்பியபடி நமது அறிவுப் பசியை நீக்கிக்கொள்ள வாய்ப்பு எப்போதும் இருக்குமா? இராதன்றோ! எனவே, வீட்டுக்கு ஒரு தனிச் சிறு நூல் நிலையம் விளங்குவதுதான், நாட்டுக்கு ஒரு பெருஞ் சிறப்பும் நன்மையும் ஆகும்; மக்கள் அறிவு நலமும் பண்பு நலமும் பெற்றுத் திகழ, அதுவே வகைசெய்வதாகும்.

# நாட்டுப்புறம்.

நகர்ப்புறம், மனிதனுல் உண்டாக்கப்பட்டது; நாட்டுப் புறம், கடவுளால் படைக்கப்பட்டது, என்று ஒரு புலவர் சொல்லியிருக்கிறார். மலையுஞ் சோலையும், ஆறுங் குளமுமான மன அமைதி தரும் இயற்கை எழிலோவியக் காட்சிகள் நாட்டுப்புறத்தில் நிறைந்திருக்கும்; திரைப்படக் காட்சிச் சாலைகளும், உணவு விடுதிகளும், பலவகையான பொருட் காட்சிச் சாலைகளும் ஆன மனமயக்கந்தரும் செயற்கைத் தோற்றங்கள் நகர்ப்புறத்தில் மல்கி யிருக்கும். உடை உணவு நிலைகளில் விலையுயர்ந்ததாகவும், ஆடம்பரமாகவும் நிகழும் நகர்ப்புற வாழ்க்கையில், அப்புலவர் அவ்வளவாக விருப்பங் கொண்டிருக்கவில்லை. அதனுல், அவர் அங்கு நடைபெறும் சீட்டாட்டக் கூட்டங்களையும், திரைப்படக் கூடங்களையும், பகட்டான உணவுச் சாலைகளையும், இன்னும் இவைபோன்ற போலி நாகரிக வாழ்க்கை நிகழ்ச்சிகளையும் பெருமைக்குரி யனவாகக் கருதுவதில்லை. அதுவேயும் அன்றி, நடன விருந்து நடத்துவதிலும், மதுவும் மங்கையுமாயிருந்து மகிழ் வதிலும், இன்ன பிறவெற்றுர வாரச் செயல்களில் ஈடுபட்டுப் போது போக்குவதிலும், பலர் தமது உடல் மன நலங்களை யும், கல்வி பொருட் செல்வங்களையும் இழந்து விடுவதை எண்ணி இரங்குகின்றுர். உண்மையான இன்பம் அவற்று லெல்லாம் ஏற்படுவதில்லையே எனவும் எடுத்து மொழி கின்றுர். நிற்க,

இலக்கியத் துறையில் ஈடுபட்டுள்ள பெருமக்கள் பெரும் பாலும், நாட்டுப்புற வாழ்க்கையிலேயே விருப்ப முள்ளவராக இருப்பார்கள். ஏனென்றால், நெருக்கடியுங் குழப்பமும் நிறைந்த நகர்ப்புறம், அவர்களது எண்ணம் ஒருமுகப்படுதற்கும், ஆழ்ந்து எதையும் ஆராய்தற்கும் தடையாக இருக்கிறது. ஆனால், நாட்டுப்புறங்களில் எண்ணவும் எழுதவும் ஏற்ப, அமைதியான சூழ்நிலை எஞ் ஞான்றும் இருந்து வருகிறது. மற்றும், வயல் வெளிகளும் காடுமேடுகளும், ஆட்டிடையர் மாட்டிடையர் ஆகியவர்களது எளிய வாழ்க்கைப் போக்குகளும், உழுதுண்டு வாழும் உழவர் பெரு மக்களின் தொழில் முறைகளும், அந்தப் புலவர் பெருமக்களின் உள்ளங்களைக் கருத்து ஊருணிகளாக ஆக்கி விடுகின்றன.

பெரிய வணிகர்களும், உயர் அலுவலாளர்களும், நகர்ப்புறங்களிலேயே, தங்கள் வாழ் நாளின் பெரும் பகுதியைப் போக்கிக் கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டு விடுகிறது. அதனால், அலுவலகத் தொடர்பாகவும், வணிகத் தொடர்பாகவும் அடிக்கடி அவர்களுக்கு உண்டா கும் தொல்லைகளை அன்னார் தம் நாட்டுப்புறங்களுக்கு விடு முறையில் வந்திருந்து காணும் இயற்கையின் அமைதி நிரம்பிய காட்சிகள் மூலம் மறந்து விட்டு மகிழ்ந்திருக்க முடிகிறது. அவர்களும், கண்களால் கவினுறு காட்சிகளைக் கண்டுகளிக்கிறார்கள். ஆனால், அவர்கள் காண்பார், களிப்பர், மறப்பர்; புலவர்களோ, கண்டு மகிழ்வதோடு, சாவாத செய்யுட்களை இயற்றுவதன் மூலம், கண்ட காட்சிகளை என்றும் நிலைபெறச் செய்து விடுகின்றனர். ஆகவே நகர்ப்

புறங்களிலுள்ள, பரபரப்பான, மனச் சஞ்சலத்திற்கு இடந்தரக்கூடிய, பொல்லாத நிகழ்ச்சிகளிலிருந்து, விலகி வாழ்ந்து வருகின்ற நாட்டுப்புற மாந்தர், எவ்வளவு மன மகிழ்வும் அமைதியும் கொண்டு திகழ்கின்றனர் என எண்ணும் போதுதான், ஏனையோர்க்கு, இயற்கையோடு இயைந்த அந்த வாழ்க்கையைப் பெரிது விரும்பும் மனப் பான்மை ஏற்படும்.

புலவர் பெருமக்களெல்லாம், நாட்டுப்புற வாழ்க் கையைப் பற்றி, அளவு கடந்து புகழ்ந்தெடுத்துக் கூறிவிடும் இயல்புடையவர்களாய் இருக்கின்றார்கள், தங்களைப் போலவே, எளிய மக்களும் இயற்கைச் சூழ் நிலைகளால் இன்புறுகின்றார்கள் என எழுதிவிடுகின்றனர். எனினும், அறியாமை நீங்கி ஓரளவாவது கல்வியறிவு ஓங்கியிருந்தா லன்றி, அவர்கள் அந்த அளவுக்கு இயற்கை வனப்புக்கண்டு களிக்க முடியாது என்பதை நாம் அறிந்து கொள்ள வேண் டும். பொருத்தமில்லனவும், பொருளற்றனவுமான நகர்ப் புறக் காட்சிகளைக் கண்டிருந்தாலல்லாமல், நாட்டுப்புற வாழ்க்கையின் உண்மையான இயல்பை வேறு படுத்தி உணர்ந்து கொள்வதும், பயன் பெறுவதும் எங்ஙனம் முடியும்?

எனவே, கவர்ச்சியான பொருள்களும் காட்சிகளும் நிகழ்ச்சிகளும் இருந்துவருகின்ற நகர்ப்புற வாழ்க்கையின் தன்மையை, நாட்டுப்புற வாழ்க்கை யுடையார், இடை யிடையே கண்டு தெரிந்து, பொருந்துவன கொண்டு, பொருந் தாதன நீக்கித், தமது வாழ்வின் அமைதியும் மேன்மையும் எண்ணிப் பயன் பெற வேண்டும்.

நகர்ப்புற வாழ்க்கை, கல்வித் துறையில், இளமாணவனுக்கு எவ்வளவோ நலந்தரக்கூடியதாக அமைகின்றது. நாட்டுப் புறங்களில் தொடக்கப் பள்ளிகளே உள; கல்லூரிகள் இல; ஆனால், நகர்ப் புறங்களில் கணக்கற்ற பள்ளிகளும் கல்லூரிகளும் இருக்கின்றன. அக்கல்வி நிலையங்களில், ஒவ்வொரு துறையிலும் தேர்ந்த நல்லாசிரியன்மார் பலர், அறிவுப் பணியாற்றி வருகின்றார்கள். கல்வித்துறை எதுவானாலும், முற்றும் கற்றறிய ஒருவன் விரும்புவானானால், அவ்விருப்பத்தை நிறைவேற்றிக் கொள்வதற்கு இடந்தரும் கல்வி நிலையங்கள் சில, நகர்ப் புறங்களில் பெரும்பாலும் இருக்கும், அங்கே, அவன், தனது அறிவுத் திறனை வெளிப்படுத்தினால், கற்கும் உதவிச் சம்பளம் பெற்றுத், தன் பணச் செலவைக் குறைக்கவும், மேற்படிப்புப் படிக்கவும் வசதி ஏற்படும். இவ்வாறு கல்வி நிலையங்களில் பயிலும் வாய்ப்புக்கள் கிடைக்கப் பெறுவதால், அதனோடு, பெரிய நூல், நிலையங்களுக்குச் சென்று பயிலும் வாய்ப்பும் இயல்பாகவே ஏற்படுகின்றது. அந்நூலகங்களோடு இணைந்திருக்கும் படிப்பகங்கள் வாயிலாக, உயர்ந்த இலக்கியங்களையும், சிறந்த அறிவியல் ஏடுகளையும், மெய்யுணர்வு நூல்களையும் படித்துப் பெரும் பயன்பெற முடிகின்றது. பலவகையான செய்தித் தாள்களையும் படித்து, இப்பரந்த உலக முழுவதும் நடைபெறும் நிகழ்ச்சிகளை யெல்லாம் தெரிந்துகொள்ள, நகர்ப்புற வாழ்க்கை, பெரிதும் உதவியாக இருக்கின்றது.

வெறுஞ் சுவடிப் படிப்பு மட்டுமே இருப்பின், அது கல்வியாகக் கருதப்படாது. மற்றுச், சுற்றுச் சூழ்நிலைகளை நன்கறிந்து கொண்டு, அவற்றிற்குப் பொருந்துமாறு

வாழ்க்கை வசதிகளை அமைத்துக் கொள்ளத் தெரிந்திருக்க வேண்டும், பிற்கால வாழ்வு நடாத்தக் கற்கப்புகும் இள மாணவன், என்பது அறிதற்குரியது. இத்தகைய அறிவை, நகர்ப்புறங்களில் அமைந்த கல்வி நிலையங்களில் பயிலும் மாணவன், பலவகையாலும் எய்துகின்றான். என்றாலும், கல்லூரிகளிற் கற்குஞ் சில மாணவர்கள், தம் நினைவு, சொல், செயல்களை யெல்லாம், புத்தகங்களில் மட்டுமே புதைத்துக் கொண்டு, புற உலக நிகழ்ச்சிகள் ஏதுந் தெரியாமல் இருந்து வருகின்றார்கள். ஆடம்பரமும் ஆரவாரமும் மிகுந்த நகர்ப் புறங்களில், தாம் கற்கும் இடத்தைச் சுற்றிலும் உள்ள பொருள்கள், நிகழ்ச்சிகள், நிலையங்கள் முதலானவற்றில் கவனஞ் செலுத்தாது, வெறுமனே ஒதுங்கிவாழும் மாண வரும் இருக்கின்றார். இஃது எவ்வளவு பெரிய இடர்ப்பாடாக முடியும் என்பதை எண்ணிப் பாருங்கள்! அன்னார், தமக்கு வாய்த்த ஒழிவு நேரங்களில், அறிவவாவும் நுட்ப நோக்கத் தோடு, அங்கங்குங் காணப்படும் பொதுக் கட்டிடங்கள், நிலையங்கள், துறைமுகப் பகுதிகள், தொழிற் சாலைகள், நாகரிக வாழ்வுக்குத் துணையாக நிற்கும் ஆலைகள் முதலிய எல்லாம் கண்டு தெரிந்து வைத்திருக்க வேண்டும். இங்ஙனம் இராவிடின், கலைக் கழகக் கல்வியால் எய்த வேண்டிய எண் ணற்ற கருத்துக்களை, அவர்கள் இழந்து விடுகின்றார்கள் என்றே இயம்பலாம். நிற்க,

நாட்டுப்புற வாழ்க்கை, அமைதியான முறையில் மந்த மாக இயன்று கொண்டிருக்கும்; நகர்ப்புற வாழ்க்கை, ஆர வாரமான முறையில் அறிவுக் கிளர்ச்சியுடன் நடந்துகொண் டிருக்கும். நாட்டுப்புறம், மக்கள் நெருக்கமில்லாமல், வீடு கள் அணித்துஞ் சேய்த்துமாக இருக்கும்; நகர்ப்புறம்,

நெருக்கடியான நிலைகளோடு சுற்றமாக வாழும் சூழ்நிலை யமையாமல் இருக்கும். நாட்டுப்புறம், ஊர்திகள் இல்லாமல், மக்கள் மெல்ல நடந்து செல்ல வசதியாக இருக்கும்; நகர்ப் புறம், பலவகை ஊர்திகள் விரைவாகவும், குறுக்கு நெடுக் காகவுஞ் சென்று கொண்டிருப்பதால், வழி கடந்து செல்ல முற்படுவார்க்குப் பதைப்பும் நடுக்கமும் ஈன்று கொண் டிருக்கும். ஆனல் மக்கட் கூட்டம், நகர்ப்புறங்களில், மிக் கிருப்பதால் ஒருவரோடு ஒருவர் எதிலும் போட்டி போட் டுக்கொண்டு, மனக் கிளர்ச்சியுடன் செயலாற்றத் தூண்டு கோலாக இருக்கிறது. அதனுல், எளிமையாகவும், எழுச்சி யில்லாமலும் அமைதியாகவும், வாழும் நாட்டுப்புற மாந்தர் போன்று இராமல், நகர்ப்புறம் வாழ்நர், ஆடம்பரமாகவும், ஊக்கமாகவும், கலகல வென்றும் வாழ்ந்து வருகின்றூர்.

மேற்கூறியவாறு வாழ்வு நடாத்துபவர்கள், தங்கள் மதியை மயக்கி மருட்டுகின்ற பலவகையான பொருள்கள், நிகழ்ச்சிகள் முதலானவை, நகர்ப்புறங்களில் நிரம்பவுள என நினைவில் பதித்துக்கொள்ள வேண்டும். அன்றியும், அவற்றிற்கு அறிவிழந்து அடிமையாகி விடாமல், அன்னூர் தம் மன எழுச்சிகளை அடக்கி ஆண்டு வரவேண்டும், இல்லா விடின் தமது மன நலமும் உடல் நலமுஞ் சிதைத்துக் கொண்டவராய்ச் சிறுமை எய்தி விடுவர். அதுமட்டுமா! நாட்டுப்புறத்தில் அமைந்த வீட்டு வாழ்வை நீத்து வந்த தனுல் ஆகிய கழிபெருந் துன்பத்தைப் பின்னே நினைந்து வருந்துதற்கும் இடம் ஏற்படும்.

நாட்டுப் புறங்களில் வாழ்பவர், ஞஞ்ஞான்றும் பசுஞ் செடி கொடிகள் மீதளாவி வருந் தூய காற்றை உட்கொள்

கின்றார். உழுதொழில் முதலானவை புரிந்து உடலுரம் பெற்றுத் திகழ்கின்றார். நகர்ப்புறங்களில் வாழ்பவர், நோயற்ற நல்வாழ்வும், அதனால், இன்பமும் எய்த எண்ணு வார்களானால், நாள்தோறும் உடற்பயிற்சி செய்துவரும் பழக்கத்தைக் கடைப் பிடியாய்க் கொள்ளவேண்டும். அது வல்லாமல், தங்கள் விடுமுறை முழுதும், நாட்டுப்புறங்களுக் குச் சென்று விழுமிய முறையில் பயன் கொண்டு போக்க வேண்டும். ஏனெனில், நலத்துறை அதிகாரிகள், நகர்ப்புறங் களில், பலப்பல முறைகளாலும், என்னதான் புறந்தூய்மைக் கான வழிவகை செய்தாலும், அது, நாட்டுப்புறங்களில் இயல் பாக அமைந்த துப்புரவான சூழ்நிலைக்கு ஒப்பாக முடியுமோ? ஆகவே, நகர்ப்புற வாழ்க்கை யுடையார்க்கும், நாட்டுப்புற வாழ்க்கை, இடையிடையே வேண்டற் பாற்று என்பது அறியப்படும்.

1. நகர்ப்புறம், வாழ்க்கை வசதிகள் மிக்குத் திகழு கிறது; சான்றாக, அஞ்சல் நிலையம், மருந்தகங்கள், ஊர்தி கள், பாதுகாப்பு, கற்றோர் கூட்டுறவு, வேண்டிய பண்டங் கள் கிடைக்கும் அங்காடிகள், செயற்கைக் காட்சி, அலுவல கங்கள், ஆலைகள், வானொலி, மின்விளக்கொளி, முதலான பல துறைகளாலும் விளக்கமாக இருக்கின்றது. நாட்டுப் புறம், மேற்கூறியன போதிய அளவு வாய்ந்திராமல் காணப் படுகிறது. எனினும், நகர்ப்புறம், சிலவகைகளில் நாட்டுப் புறத்தைவிட, இடர் மிகுந்து தாழ்வுற்றிருப்பதைச் சிறிது சிந்தனை செய்தால், தெளிவாகத் தெரிந்துகொள்ளலாம்.

2. மலைகளிலும், மரஞ்செடி கொடிகளிலும் பொருந்தி வீசும் தண்ணென்ற மெல்லிய பூங்காற்றை நாட்டுப்புற

மக்கள், நன்ருய்ப் பயன் கொள்கின்ருர்கள். நகர்ப்புற மாந்தரோ, அத்தகைய மென் காற்றில் விளை சுகத்தைத் துய்க்கப் பெருதவர்களாய் இருப்பதோடு, வெப்பமும் புழுக்கமும் வாய்ந்த நெருக்கடிகட்கு இடையே, புகையுந் தூசும் மிகுந்த காற்றை உள்ளிழுத்து வெளியிட்டுப் பெரிதும் திணறுகின்ருர். பச்சைப் பசேல் என்று இருக்கும் இளம் புற்றரையையும், இலை தழைகளோடு காணப்படும் மரக் கூட்டங்களையும், பசும் பயிர் வளர்ந்திருக்கும் வளவயல்களையும், நாட்டுப்புறம்வாழ்நர், கண்குளிரக் கண்டு, மனங் குளிர்கின்ருர். நகர்ப்புற மக்களோ, அந்த வளமையான காட்சிகளைக் காணும் வாய்ப்புப் பெருதவர்களாய் இருப்பதோடு, நீளமான பெரிய தெருக்களில், வரிசையாக இருக்கும் வீடுகளின் சுவர்களில், தீற்றிய சுண்ணும்பின் காரணமாக எழும் ஒளி, ஞாயிறு, பகல் நேரத்தில் கொளுத்தும் வெள்ளொளியோடு கலந்து, கண்ணின் பார்வையை மழுங்க வைக்கும் நிலையை நீக்க முடியாதவர்களாய் இருக்கின்ருர்கள்.

3. நகர்ப் புறங்களில் காண்பன எல்லாம் தொழிற்சாலைகளின் நீண்டுயர்ந்த புகைபோக்கிகளும் அவற்றிலிருந்து புகைமண்டிக்கொண்டிருக்கும் நிலைகளுமே ஆகும். அங்கு வாழ்பவர்கள் கோழிகூவும் பொழுது முதல், கோட்டான் குரல் எழுப்பும் நேரம் வரையும்—ஏன்? நாள் முழுதுமே—பலவகை ஊர்திகள் கிளப்பும் இடைவிடாத பேரிரைச்சலைக் கேட்டுக் கேட்டுச் செவி மந்தம் எய்தப் பெறுகின்ருர். நாட்டுப்புற மக்களோ, தென்னங் கீற்றிலே உராய்ந்துவரும் தென்றற்காற்று எழுப்பும் ஒலியையும்,

குயிலுங் கிளியும் ஆகியபறவைகளின் ஒலியையும் கேட்டுக் கேட்டுச் செவியினிமை எய்தப்பெறுகின்றார்.

நகர்ப்புறங்களில், பட்டும் துகிலும் உடுத்து, இன்ப ஊர்திகளில் விரைந்துசெல்லும் பணக்காரர்கள், வழியோரத் தில்கால்நடையாய்ச்சென்றுகொண்டிருக்கும் பொதுமக்களைப் பற்றி எதுவுங் கருதாமல், குரல் எழுப்பி நடுங்க வைத்துக் கொண்டு போகின்றார்கள். நடந்து செல்பவர் ஒருவரோ இருவரோ, ஊர்தியில் அடிபட்டுத், துடிதுடித்துக் கிடந்தா லும் அதைப்பற்றி, அவ்வளவாகக் கவனஞ் செலுத்தாமல், அவர்களெல்லாம், பெரிய கட்டிடங்களின் மாடிகளின்மேல், ஓடியேறி அமர்ந்து கண்டுகொண்டிருப்பர். நகர்ப்புறங்களில், அங்ஙனம், ஊர்திகளில் அடிபட்டு மாய்ந்து கிடப்பது, அவ்வ ளவு முக்கியமான நிகழ்ச்சியாகக் கருதப்படுவதில்லை. அந்த அளவுக்கு நாகரிகப்பண்பு, அங்கெல்லாம் போற்றப்பட்டு வளர்க்கப்பட்டு வருகிறது!

மேல் எடுத்து மொழிந்தவையெல்லாம், நாட்டுப் புறவாழ்வை விரும்பும் மகனுக்கு நகர்ப்புறத்தில் வாழ்ந்து வருங்கால், இடர்ப்பாடு செய்யுஞ் சிலநிகழ்ச்சிகள் தாம். அவை நகர்ப்புறம்வாழ்நர்க்கு, ஏதோகற்பனைகள் போலவும், உண்மையல்லாதன போலவும் தோன்றும். ஏனென்றால், அவர்கள், அவற்றையெல்லாம் நாள் தோறும் கண்டுங் கேட்டும் பழக்கப் படுத்திக் கொண்டார்கள். ஆனால் நாட் டுப்புற மக்களுக்கு, அவை, துன்புறுத்துவன வாகவும், மனந் தடுமாறச் செய்வனவாகவும் இருக்கின்றன.

புகை பிடித்தலாலும், புகை வண்டிப் புகை மிகுத

லாலும், ஆலைகளிலிருந்து புகை வெளிவந்து கொண்டிருப்பதாலும், நகர்ப்புறக் காற்று, உண்மையாகவே, மாசுடையதாகின்றது. அது, நம் உடல் நலத்திற்கு எவ்வளவு பெரிய கேடு செய்யும் என்பதை எவரும் எண்ணித் தெரிந்து கொள்ளலாம். இஃது ஒருபுறம் இருக்க, நகரங்களில் எல்லாம், அழகிய பூங்காக்கள் ஏற்படுத்தியும், தூய நீர்பெறும் வசதியும் செய்து தரப்படுவதால், நல்வாழ்வுக்கு அவை உதவியாயிருக்கின்றன. நலத்துறை அதிகாரிகள், இன்ன பிற, நோயற்ற நல்வாழ்வுக்கான வசதிகள் பல புரிவதில், பேரார்வஞ் செலுத்திச் செயல் ஆற்றுவார்களானால், நாட்டுப்புறம் போன்று நகர்ப்புறமும் வாழ்க்கை நடாத்தத் தக்கது என்றே சொல்லலாம்.

கடைசியாக, ஒன்று மட்டும் நாம் கருத்தில் இருத்திக் கொள்ள வேண்டும். காலத்தையும் செல்வத்தையும் வீணாக்கும் கவர்ச்சியான சூழ்நிலைகள், நகர்ப்புற மக்களைத், தம்பால் நயமாக ஈர்த்துவிடும். அவற்றால் இன்பம் அடையலாம் என்று அறியாமையால் எண்ண நேரிடும். இன்னும், நாட்டுப்புறங்களில் இருப்பதைவிட, நகர்ப்புறங்களிலேயே, அறத்திற்கு மாறான செயல்களும், ஒழுக்கக் கேடுகளும் பெருகி நிற்கின்றன. அதனால், நகரங்களில் வாழும் நற்றமிழ் இளைஞன், தீநட்பாளருடன் சேர்ந்து தன் ஒழுக்கத்தையும் உடலையும் கெடுத்துக் கொள்ளாமல் இருக்கவேண்டும். தன் மன வன்மையோடு, தனக்கென்று அமைத்துக் கொண்ட நேரிய நெறியில் நின்று, நன்னட்பாளர்களிடம் அறிவுடன் பண்பறிந்து பழகி, அங்குக் காணப்படும் போலி மயக்குகளில் வீழ்ந்து விடாமல், அவற்றை விலக்கித் தள்ளி, எழுச்சியோடும் இன்பத்தோடும் பயன்பெற வாழ்வதைத் தெரிந்து கொள்ள வேண்டும்.

# செய்தித் தாள்

## 1

செய்தித்தாள் என்பது, விரிந்துகிடக்கும் இவ்வுலகின் எல்லா இடங்களிலும் நிகழுஞ் செய்திகளைத் தெரிந்து கொள்ள உதவியாயிருக்கிறது. இலக்கியம், மதம், இசை, விளையாட்டு, அறிவியல், அரசியல், முதலான வாழ்க்கைத் துறைகள் எல்லாவற்றிற்கும் தனித்தனி இதழ்கள் இருந்து வருகின்றன. இவற்றுள், அரசியற் சார்புடைய நாள் இதழ் கள் தாம், பெரும்பாலோரால் கற்கப் படுகின்றன. ஏனைய, அவ்வத் துறைகளில் ஆர்வம் உடையவர்களால் ஆதரிக்கப் படுகின்றன.

அரசியற் செய்திகளை அறிய ஆர்வம் உள்ளவர்கள் பெரும்பாலார்; எனினும், விளையாட்டு நிகழ்ச்சிகளையும், திரைப்படச் செய்திகளையும், குற்ற வழக்குகளையும் தெரிந்து கொள்ளும் ஆர்வம் உள்ளவர்களும் இருக்கின்றார்கள். எவர் எப்படி இருந்த போதிலும், இச்செய்தித் தாள்கள் எல்லாம் அவ்வவ் வேளைக்குரிய கருவிகளாகப், பொழுதுபோக்குவ தற்கு ஆவனவேயன்றி, வேறென்ன? எங்காவது எப்போ தாவது மேற்கோளுக்காக எடுத்துக் காட்டப் பயன்படும். வாழ்க்கையில் பண்பாடு உயர்ந்து திகழப் பயன்படுவது ஒரு சிறிதும் இவற்றில் இல்லை என்பது அறிந்து கொள்ள வேண் டியதாகும்.

அரசியல் கட்சிச் சார்புடைய செய்தித் தாள் நடத்து பவர், தம் கொள்கை விளக்கத்தை மக்கள் முன் எடுத்துக் காட்டி, அதன் மூலம் அவர்களைத் தம் கட்சி நடைமுறைச் செயல்களுக்கு உதவியாயிருக்கச் செய்து, தம் நோக்கத்தை

நிறைவேற்றுவதில் கண்ணும் கருத்துமாக இருப்பர். இத் தகைய அரசியல் கட்சிகளின் நாளிதழ்களை விரும்பி வாங்கிப் படித்து வருபவர், கருத்தில் இருத்த வேண்டுவது ஒன்று உண்டு. இதழ்களிலுள்ள செய்திகளைப்படித்தறிந்து கொள்ளுதல் என்பது ஒன்று; அரசியல் சிக்கல்களைப் பற்றிய இதழாசிரியர் கருத்து விளக்கத்தைப் படித்தல் என்பது மற்றொன்று. ஏன் இதை இங்கு எடுத்து இயம்ப வேண்டும் எனின், செய்தித்தாள் படிப்பவர் பலரும், எதனையும் பகுத்து அறிந்து காணும் பண்பு வாய்க்கப் பெற்றிலர் என்பதனால் ஆம். தாம் விரும்பிப்படிக்கும் இதழ்களில் காண்பன எல்லாம் கசடற்றன என முன்னமே முடிவான கருத்துடையவர்களாக அமைந்து விடுகின்றார்கள். இவ் வாறு மக்களிற் பெரும்பாலார் இருத்தலின், நடுவு நிலைமை என்ற நல்லியல்பை விரும்பியவராய்ச் செய்தித்தாள் நடத்து பவர், மாறுபாடான செய்திகளையும் தமது இதழ்களில் மதித்து வெளியிட்டு வருதல் வேண்டும். ஒரு பொருள் குறித்த இருவேறு செய்திகளைக் காணும் போது மக்கள் சிறிது சிந்தனை செய்யத் தொடங்குவர்; இப்படியே இந்த இயல்பு வளர்ந்து வரும்.

எனவே, நமது அருமைச் செந்தமிழ் நாட்டில் உலவுஞ் செய்தித் தாள்களை நடத்தும் நல்லறிஞர் எல்லாரும், எதனைப் பற்றியும் எதிரான செய்திகளுக்கும் இடந்தந்து வெளியிட்டு வருவாராயின், மக்களின் சிந்தனை வளர்ச்சியுற வும், பண்பு மேம்பாடு அடையவும் சிறிது துணைபுரிபவராவர். இது நிற்க.

இப்போது மக்களாட்சிக் கோட்பாடு மாநிலம் எங்கும்

போற்றப்பட்டு வருகிறது. மொழியாலும் இனப் பண்பாலும் பலவகைப்பட்ட தனிச்சிறு நாடுகளைத் தன்னகத்தே கொண்டிருக்கின்ற நம் இந்தியப் பெருந்தேயமும் குடியரசு என்று கூறப்படும் நிலையில் நிற்கிறது. குடியரசு நாடுகளில் மக்களது கருத்துக்கே மிக்க மதிப்பு உண்டு. அரசியல் தொடர்பான, பொது மக்களின் ஒருமித்த கருத்தை உருவாக்கும் பணியோ, செய்தித்தாள் ஆசிரியர் தம் ஆற்றலில் அடங்கிக் கிடக்கிறது. மக்கள் உள்ளத்தை நன்னெறியில் செலுத்தி நாட்டுக்கு நலம் விளைக்கவும், அரசியலார்க்கு எதிரான கிளர்ச்சிகளில் அவர்களை ஈடுபடுத்தி ஆட்சியைக் கவிழ்த்து நாட்டுக்குத் தீங்கு விளைக்கவும், வன்மை வாய்ந்த செய்தித் தாள்களால் முடியும்.

ஆகவே, அறிவோடும் அறவுணர்ச்சியோடும் நாட்டு மக்கள் மனத்தைப் பண்படுத்தி, ஆட்சியாளர்க்கும் பொது மக்களுக்கும் இருக்கவேண்டிய நல்லுறவைக் காப்பாற்றி, நற்பணியாற்றுவதே, சிறந்த செய்தித்தாள் நடத்துபவர் தம் கடமையாகும்.

2

செய்தித்தாள் படித்தலால் மிகுபயன் விளைவதில்லை; அதனை முழுதும் நீக்கவேண்டுமென்று அறிவுடையோர் சிலர் சொல்லுகிறார்கள். ஏனென்றால், நல்ல நூல்களைப் படித்தறிய, நமக்கு நெடு நேரம் ஆகின்றது. இதழ்களைப் படிப்பதற்கோ, படித்தார் பலர், ஒரு நாளுக்கு ஒருமணி நேரம், அதாவது, ஆண்டு ஒன்றுக்கு ஏறக்குறைய முந்நூற்று அறுபத்தைந்து மணி நேரம் செலவிடுகிறார்கள். பெரும் பயன் தராத நாளிதழ்களைப் படிப்பதற்குப் போக்கும் அந்த நேரத்தில், நல்ல இலக்கியங்களைக் கற்று, நம்

வாழ்வில், நல்லொழுக்கத்திற்கு அடிப்படையான கருத்துக்களைத் தெரிந்து பயன் பெறலாம் என்று அவர்கள் கருதுகிறார்கள்.

மேற்கூறிய கருத்து வேற்றுமை பெரிய அறிவாளிகள்பால் இருந்து வருகிறது; என்றாலும், செய்தித் தாள் படிப்பவர்களில் பலர், நாள்தோறும் வெளிவரும் இதழ்களைத் கற்று வரும் தம் பழக்கத்தைக் கைவிடுவார்களானால், வேறு எதுவும் படிக்க முடியாத நிலையிலேயே நின்று விடுவர். கடுமையான அறிவு முயற்சியில் ஈடுபட்டிருப்பவர்கள், செய்தித்தாள்களை ஒவ்வொருநாளும் தொடர்ந்து படிப்பதன் மூலம், தங்கள் மூளை வேலையின் சுமையை மிகுதிப் படுத்துவார் ஆகின்றனர். இது நிற்க,

நாளிதழ்களைக் கற்பதன் மூலம், பயன்படும் பற்பல நற்செய்திகளையும், உள்நாட்டு வெளிநாட்டு நிகழ்ச்சிகளையும் உலகச் சூழ்நிலைகளையும் நாம் அறிந்து கொள்ள முடிகிறது. எனவே, நாளிதழ்களைக் கற்க மறுத்து விடுவதால், இந்த வகையில் நமது அறியாமையை மிகுப்பவர்கள் ஆகின்றோம். ஆயினும், செய்தித்தாள்களில் அடங்கியிருக்கும் கருத்துக்களில் பெரும்பாலானவை, காலப்போக்கில், இயல்பாகவே, மறக்கப் பட்டு விடுகின்றன. அதனால், அவை, நம் அறிவு வளர்ச்சிக்கு, அந்த அளவுக்கு, உதவி செய்வன அல்ல. செய்தித்தாள் படிப்பதால், ஒரு பெரிய நன்மை நமக்கெல்லாம் விளைகின்றது. இயற்கையாகவே, நமது மனத்திற்கு எழுச்சி தரத்தக்க, நம் வாழ்வோடு பெரிதுந் தொடர்புடைய, நம் நினைவினின்றும் நீங்காமல் நிலைத்து நின்று பயன்தரக்

கூடிய, தற்காலத்தின் பற்பல வரலாற்று நிகழ்ச்சிகளைச் செய்தித்தாள்களே, நமக்கு நல்குகின்றன. இவற்றை நாள் தோறும் வெளிவரும் இதழ்களில் அல்லாமல், வேறு எவற்றில் எங்கே காண முடியும்?

சிறிது சிறிதாகவும், ஒழுங்கற்ற முறையிலும் இருந்தாலும், கடந்த காலத்தில் நடந்த, நூற்றாண்டுக் கணக்கான வரலாற்று நிகழ்ச்சிகளின் வளர்ச்சியைத் தொடர்புபடுத்தி, நம் முன் கொண்டுவந்து புகட்டுவன, செய்தித் தாள்களே. பல்வேறு நாடுகளில் நிகழும் வெற்றிச் செய்திகளையும் இடர்ப்பாடுகளையும் பிறவற்றையும் எல்லாம், படிப்பவர்களின் மனக் கண் முன் கொணர்ந்து நிறுவிக் காட்டி, அன்புணர்வையும் இரக்க வுணர்வையும் பெருகச் செய்து, உலக முழுமையும் ஒருமை யுணர்ச்சி வளரத் துணை செய்வன செய்தித் தாள்களே. புதிய எழுத்தாளர்களின் சிறந்த நூல்களையும், பெரிய அறிவியல் அறிஞர்களின் அரிய கண்டு பிடிப்புகளையும் மிக விரைவாய் எல்லாரும் அறியும்படி வெளிப்படுத்துவன, செய்தித் தாள்களே. புல மக்களுக்கேயன்றிப், பொது மக்களுக்கும் நாட்டு அரசியல் நிகழ்ச்சிகளின் தொடர்ச்சியான பலவகைச் சிக்கல்களுக்கு முடிவும் தெளிவும் தந்து நல்ல அறிவுப் பணி புரிவன, செய்தித் தாள்களே.

நாளிதழ்கள், நாட்டின் பல்வகைக் கட்சிகளின் உறவு கொண்டு இருப்பதால், ஒன்றில் வெளிவருஞ் செய்தி ஒரு வகையாகவும், மற்றொன்றில் வெளிவருஞ் செய்தி இன்னொரு வகையாகவும், இருக்கும்; எனினும், இரண்டு வேறுபட்ட செய்திகளையும் ஒப்பிட்டு நன் முடிவு காணும் நீதி

யுணர்ச்சி பெருகுவதற்குக் காரணமாக இருப்பதால், அவை கல்லார்க்கும் கற்றூர்க்கும் நல்ல தொண்டு ஆற்றுகின்றன என்றே சொல்லலாம். இன்னும், உள்நாட்டு, வெளிநாட்டு நிகழ்ச்சிகள் முழுதும் வெளிப்படுத்துஞ் செய்தித் தாள்களே, இலக்கியத் துறையில் வல்லார், கற்றுத் தெரிந்து கொண் டிராவிடின், அவர்தம் ஆற்றலை நல்ல வழியில் நாட்டுக்குப் பயன் படுத்த முடியாமல் போய்விடும். அத்தகைய சூழ்நிலை யில் அன்னூர் இருந்து வருவார்களானல், பொது நலப்பணி புரியுஞ் செயலில் ஈடுபடுதற்கும், தேர்தல் காலங்களில் வெற்றி எய்தி ஆட்சிப் பொறுப்புப் பெறுதற்கும் தடையாய் முடிந்து விடும். அதனுல், அறியாமை மிக்க மக்கட் கூட்டத் தின் வன்மையே மேலோங்கப் பெற்று, நாட்டு ஆட்சியின் எல்லா நிலைகளும், பெருங்குழப்பமாகக் காட்சியளித்துவரும். இதனுலெல்லாம் செய்தித்தாள் படித்தல், நிரம்பவும் பெரிய பயனை, யாவர்க்கும் தரும் என்பது தெளிவாகும்.

## 3

செய்தித் தாள்கள், நாகரிகம் அடைந்த நாடுகளிலெல் லாம், அரசியல் துறையில் முதன்மையான நிலையில் திகழ் கின்றன. செய்தித்தாளின் நோக்கமும் போக்கும் நல்லன வாயிருந்தால், ஆக்கமும், தீயனவாயிருந்தால் கேடும் விளை கின்றன. செய்தித்தாள், மொழி நடையிலும் கருத்தமைப் பிலும் சிறப்புடையதாகவும், மக்கட் கூட்டம் மிக்க அளவில் வாங்கிக் கற்கும் முறையில் பரவுவதாகவும் இருந்தால், அது, பொதுமக்களைக் கல்வியறிவு பெறச் செய்கிறது; மேன்மையான நிலைக்கு, மக்கள் வாழ்வை ஈர்த்துச் செல் கிறது; நீதியான நெறிக்கு மக்கள் உள்ளத்தைக்கொண்டு செலுத்துகிறது என்றே கூறலாம். ஆனல், செய்தித்

தாளின் நோக்கம், அதன் விற்பனைப் பெருக்கத்தையும் ஊதிய மிகுதியையும் அடிப்படையாகக் கொண்டிருக்குமா ணல், அதற்கேற்ப, அது, படிப்பவர்களின் இழிந்த மன விருப்பத்தை நிறைவேற்றும் போக்கிலேயே செல்லும். அன்றியும், அறிவு பெரிதும் பெருத பொது மக்களைத் தவருன வழிக்கு இழுத்துச் செல்வதாகவும், அறநெறிக்கு முரணுகவும் போய் விடும். நிற்க,

செய்தித் தாள்கள், அரசியல் தொடர்புடையனவாகவும் அரசியல் கட்சிகளுள் ஒன்றைச் சார்ந்தனவாகவும் பெரும் பாலும் இருக்கும். இவ்வாறு இருப்பது குற்றம் என்று கூற முடியாது. ஏனென்ருல், அவை, மனச்சாட்சிக்குப் பொருந்திய முறையில் தங்கள் கட்சி நலனையும், எதிர்க் கட்சியின் குறைபாடுகளை நேர்மையான நெறியில் நின்று, எடுத்துக் காட்டி விளக்கவும் கருதியே செய்திகளைப் பரப் பும். ஆனல், சில செய்தித் தாள்கள், மனச் சாட்சிக்குப் பொருந்தாமலும், ஏதேனும் ஓர் எதிர்க் கட்சியின் கொள்கை கோட்பாடுகளோடு சேராமலும், தமக்கென்று தகுதியான நோக்கம் கொள்ளாமலும் இருந்து வருகின்றன. இக் கார ணங்களால், இவை, படிப்போர் மனத்தில் முழுதும் பிழை பட்ட எண்ணத்தையே ஏற்படுத்தி, உண்மைக்குத் திரை யிட்டு மறைக்கும் போக்கில் செல்லுகின்றன.

மேல் எடுத்துக் காட்டிய முறையில் உலவும் செய்தித் தாள்களை நடத்துகின்றவர்கள், தம் மனச் சாட்சியை ஒரு சிறிதும் மதிக்காமல் மாறுபட்டுக், கருத்துக்களை வெளி யிட்டு வருகின்ருர்கள். அதுவும் அல்லாமல், அவர்கள், அா

சியல் தண்டனைக்கு உட்படாமல் இருக்கும் சூழ்ச்சியை நன்கு அறிந்தவர்களாகவும் இருக்கின்றார்கள். அதனால், அவர்களுடைய அறிவு நலம், அநீதியான அடிப்படையில் விழுந்து கிடக்கிறது. அன்னார் நடத்தும் இதழ்கள், பொது மக்கள் நெஞ்சில் நஞ்சு புகுத்தும் அவ்வளவு கொடுமையான இயல்பின என்றே இயம்ப வேண்டும்.

சில செய்தித் தாள்கள், பலர்க்கும் அறிமுகமாகவேண்டும் என்பதற்காகவும், மிகப்பலர் வாங்கிக் கற்கவேண்டும் என்பதற்காகவும், மக்களின் இழிந்த மன எழுச்சியை நிறைவேற்றி வளர்த்துவரும் நிலையில் உலவுகின்றன, அவ்வண்ணம் வெளிவரும் இதழ்களை நடத்துபவர்கள், பொதுவாகச் செய்தித்தாள் கற்கும் மாந்தர், பெரும்பாலும், உயர்ந்த இலக்கியக் கட்டுரைகளாலோ, சிறந்த அரசியற் கருத்து விளக்கங்களாலோ, நல்ல பொருட் செறிவு பொருந்திய பகுதிகளாலோ கவர்ச்சி யுறுவதில்லை; கற்க முற்படுவதில்லை; கருத்தூன்றுவதில்லை என நன்றாகத் தெரிந்து வைத்திருக்கின்றார்கள். அதனால், அவர்கள் தங்கள் இதழ்களில், திடுமென வியப்புறத் தக்க தலைப்புக்களையும், தீய உணர்ச்சிகளைத் தூண்டக்கூடிய படங்களையும், எதிர்ப்புணர்ச்சியை எதிலும் ஏற்படுத்தும் பகுதிகளையுமே தெரிந்தெடுத்துத் தந்திரமாய் வெளிப்படுத்துவர். ஆகவே, அத்தாள்களில், நாகரிகமற்ற முறையில் நடத்தையில் தவறிய நங்கையரைப் பற்றியும், நல்ல உளப்பாங்குடையவர் நடுங்கத்தக்க கொலைச் செய்திகளையும், இன்னும், கொடுங்குற்ற வழக்குகளையுமே பரப்பிக் கொண்டிருப்பர். இந்தச் செய்தித்தாள்களாலெல்லாம், நீங்குதலில்லாத தீங்கும், நாடு முழுதும் ஒழுக்கக்

கேடும் பெருகும் என்று எடுத்து இயம்பினுல், மறுத்துரைக்க முன் வருவார் யார்?

செய்தித் தாள்களில் பல, முன் சொன்னதுபோன்று இராமல், தமக்கென்று தகுதியான வழி கோலிக்கொண்டு, நாட்டில் நல்ல முறையில் உலாவி வருகின்றன. அரசியல் துறையில், அவை, ஆத்திரங் கொள்ளாமல் அமைதியான முறையிலும், நடுநிலை பிறழாமல் நல்ல முறையிலும், அறிவு மழுக்கத்தை அடிப்படையாகக் கொண்டிராமல் அறிவு விளக்கத்தை அடிப்படையாகக் கொண்டெழுகின்ற முறையிலும் திகழுகின்றன. அல்லாமலும், நாடு, மொழி, இனம் இவற்றை நெஞ்சில் நிறுத்தி, இவற்றிற்கு வஞ்சனை புரியாமல், கருத்துரைகளை வழங்கி வருகின்றன. வீணுன வெறுஞ் சொல்லார வார நிலையில் மட்டும் நில்லாமல், சமுகச் சீர்திருத்தக் கட்டுரைகளையும், புதிது புதிதான கண்டு பிடிப்பு விவரங்களையும், அரிய பெரிய ஆராய்ச்சிகளையும் வெளிப்படுத்திப் பெருநலம் புரிகின்றன. தமிழகத்தைப் பொறுத்த வரையில், சங்க காலத் தங்கத் தமிழின் சிறப்பைத், தற்காலத்தார்க்கு நிரம்பவும் விரும்பிக் கற்கும் முறையில் பரப்பும் பணியில் இச் செய்தித் தாள்களே முன் நிற்கின்றன.

நாளிதழ், கிழமைத்தாள், திங்கள் வெளியீடு, மாதமிரு முறை வருமிதழ் எனும் எவையும் மேற்கண்ட முறையில் உலவுவதை உணர்ந்து, பதர் விலக்கிக் கதிர் கொள்வது போல், இளந்தமிழ் மாணவர்கள், தங்கள் நாடு, மொழி, இனம் இவற்றின் நலம் பேணும் இதழ்களையே வாங்கிக் கற்றுப் பயனுற முந்தவேண்டும்.

# தனிமையின் இனிமை.

அறிவு ஆழமில்லாத வெற்றுப் பேச்சுக்களிலும் வேடிக்கைக் கதைகளிலும், ஓய்வு நேரத்தின் பெரும் பகுதியைப் போக்கிக் கொண்டிருக்குஞ்சில்லோர், இலக்கியத்தின் இன்சுவையையமாந்தவும், இயற்கையின் எழில் நலத்தை நுகரவும் தனிமையைநாடும் தன்மையாளரைக் கண்டு, "நமக்குப் பொழுதுபோவது யாங்ஙனம்?" என அறியாது வினவுகின்றனர். பகல் முழுதும் பொருளீட்டும் முயற்சிகளில் நினைவெல்லாஞ் செலுத்தப்பட்டு, மாலைக்காலம் ஆனதும், அந்நினைவு வறிதாகிச் சாம்பிப்போகாவண்ணம், தனித்திருந்து இனித்திருக்கும் காட்சிகளிலும் கருத்துக்களிலும் ஈடுபடுவது எவ்வளவு மேன்மையானது என்பதை அன்னார் ஏன் உணர்கிலாது உள்ளனர்? ஒருநாளிற் சிறிது நேரமாவது நம் சிந்தனைக்கு இடந்தந்து மனஎழுச்சி பிறக்க வகைசெய்யும் தனிமையைமாந்தர் விரும்பாராயின், கரும்பின் சக்கை போலான உடலைப்போல் உள்ளமும் தளர்வுறுமே? அன்றியும், புத்தர் முதலான அறிவுத்தெளிவு பெற்ற சிந்தனைச் செல்வரும், சித்தர் முதலான கருத்தாருணியாகத்திகழும் மேன்மக்களும் தனிமையைப் பெரிது விரும்பி இனிதிருந்தமையாலன்றோ, உலகுக்கு ஒளி செய்து போதருகின்றனர்! இனிது இனிது ஏகாந்தம் இனிது என்று பிற்காலத்து அவ்வையார் அருளிய செவ்வை நன்மொழியைச் சிந்தித்துப் பாருங்கள்!

மக்கள் என்பார், எக்காலத்தும் எவ்விடத்தும் ஒருவரோடொருவர் உறவுரிமை பூண்டுவாழும் இயல் பினரேயாம் என்று மொழிந்திட்டார், மூதறிஞர் ஒருவர். கற்றுத்துறை போய அங்கல்லறிஞர் கூற்று, முற்றும் உண்மையேயாகும். ஆகவே, மக்கட் கூட்டத்தை விட்டகன்று, தனித்திருக்க முழுதும் விழைவது என்பது, இக்காலத்து இயல்பிற்கு ஏலாததொன்றாகவும் இடர்ப்பாடாகவும் முடியும். மற்று, அறிவு வளர்ச்சியையும் தெளிவையும் அவாவும் மக்களெல்லார்க்கும் சிறிதளவு நேரமாவது சிந்தித்துணர, ஒவ்வொரு நாளும் தனிமை வேண்டற்பாலது. ஆனாலும், அல்லற்பட்டஞான்று ஆறுதல் கூறுதற்கும், உளத்தளர்ச்சி நேர்ந்தவழி அதனை மாற்றிக் கிளர்ச்சியூட்டும் கனிமொழிகளைத்துதற்கும், உலக வாழ்வின் நிகழ்ச்சிகளில் தெளிவு பெறுதற்கும் வாய்த்த நண்பர் சுற்றத்தாரை எல்லாம் பிரிந்து, எஞ்ஞான்றும் தனித்திருத்தல் என்பதும், வரம்பு இகந்த பின் பெரிதிடர் பயக்கும் என்று தெரிதல் வேண்டும். மற்றும், தமரைப் பிரிந்து காலமெல்லாம் தனிமையை விரும்புபவன், தனக்கோ பிறர்க்கோ பயன் பெறுதல் ஒல்லுமோ? ஒல்லாது! ஆகவே, தனிமைக்கும் ஓர் அளவுண்டென்று அறிதல் வேண்டும்.

தனிமை என இங்கு எடுத்தியம்புவதெல்லாம், சூழ்ச்சியும் சூதும் நிரம்பிய மக்கட் கூட்டத்தினின்றும் நனிவிலகி அறிவின் வளர்ச்சிக்கும் ஒழுக்கத்தின் உயர்ச்சிக்கும் வழி கோலும் வகையாகச் சிந்தனைக்கிடந்தரும் தனித்திருக்கும் நிலையாம் என்று உணர்தல் வேண்டும். அவ்வண்ணம் தனிமையிலிருத்தல் என்பதும், சுற்றிலும் மற்ற மக்கள் இலர் எனினும், இயற்கையின் எழிலோவியக் காட்சிகளை வழங்கு

கின்ற காடுங் காவும் யாறுங் குளனும் ஏரியும் பள்ளத் தாக்கும் ஆகிய இடங்களின் உளங்கவர் சூழ்நிலைக் காட்சி களின் நடுவண் இருக்கின்ற பான்மையாகும் என்று எண்ண வேண்டும். அல்லாமலும், இன்னோரன்ன எழில் மிகு பொழிற் காட்சிகளும் பிறவும் ஆன எல்லா நலங்களும் கெழுமியிருத்தற்கு இடமான இலக்கிய நயங்களின் நாப்பண் நம் நினைவெல்லாம் ஆழ்ந்து ஆய்ந்து நுகரும் நிலையேயாம் என்றும் நினைவுகொளல் வேண்டும்.

தனிமையிலிருத்தல் தண்டனையாகவும் குற்றவாளி களுக்கு அமைகிறது. அதுவும், வரம்பு கடந்த காலம், அங்ஙனம் ஓர் குற்றவாளிக்குத் தண்டனை கொடுக்கப்படு வதும் தீதாய் முடிகிறது. எல்லார்க்குமே எல்லையில்லாத காலம் தனித்திருத்தல் என்பதும் தொல்லையாகவே காணப் படும்; அதனால், மனம் வன்பாடு எய்தும்.

வரலாற்றிலே சிறப்பிடம் பெற்ற வீரர்களும் அறிஞர் களும் பெரியார்களும் தனிமையின் இனிமையில் இருந்து கண்டு கொண்ட அரிய பெரிய அடிப்படைக் கொள்கைகளை வித்தாகக் கொண்டே உயர் நிலை பெற்றுப் பயன்மிக விளைத் துள்ளனர். அஃதொன்றா? மொழியிலே ஆட்சித்தலைமை பூண்ட புலவர் பெருமக்கள், வாழ்க்கைக்கு வழிகாட்டும் இலக்கியங்கள் இயற்றியருள்வது, தனிமையிலிருந்தேயாகும் என்று உளங்கொளல் வேண்டும்.

மக்கள் வாழ்க்கையைச் செப்பஞ் செய்தற்கும், உலக இடுக்கண்களை நீக்குதற்கும், அறியாமை இருட்போக்கி நலம் பல புரிதற்கும் ஏற்ற, புதிய கண்டுபிடிப்புகளையும்

இலக்கியங்களையும் ஆக்க முயலும் பெருமக்களது தனிமை விருப்பமே தகைமைசான்றதாகும் என்று மனங்கொளல் வேண்டும்.

நிலவின் குளிர்ச்சியாலும் நீளிரவின் அணைப்பாலும் கண்ணுறக்கங்கொண்டு, வைகறைத் துயிலொழிந்தெழுந்து, மலையின் ஓரத்திலே, மரங்களின் இடையிலே உலவி வருவதாலும் தனிமையின் இனிமை இன்னதென்று நுகர முடியும். கலித்தொகையின் காதற் காட்சிகளிலே, குறுந்தொகையின் நறுஞ்சுவைத் தீஞ் செய்யுளிலே, புறநானூற்றின் சிறப்பிலே, இன்ன பிற இலக்கியப் பூங்காவிலே மகிழ்ச்சியுடன் நுழைந்துலவி வருவதாலும் தனிமையின் இனிமை உள்ளவாறே உணர்ந்து கொள்ள இடமுண்டு.



# இலக்கியப் படைப்பு.

ஆரவாரம் மலிந்த இவ்வுலகில் உண்மையாகவே உள்ளம் அமைதியும் இன்பமும் எய்த வேண்டுமானால், இயற்கையின் எழில்மிகு காட்சிகளைக் கண்டுகளித்து வியந்து செல்வதாலும், இலக்கிய நயங்களைக் கற்றும் கேட்டும் சிந்தித்து நுகர்ந்து செல்வதாலும் அல்லாமல், வேறு எவ்வகையில் முடியும்? பணம் பதவிகளாலும், மது மாது இன்ன பிறவற்றாலும் இன்பம் அடையலாம் என்று அறியாமையால் எண்ணி, அதற்காகத் தம் நினைவு சொற் செயல்களை வரம்பு மீறி ஈடுபடுத்தி வறிது வாழ்நாள் கழிக்கும் மாந்தர் நிரம்ப இருக்கின்றார். அன்னார் கானலை நீரென நினைந்து மயங்குபவர் ஆவர். அவர்கிடக்க,

ஒரு மொழி வல்லார், அம்மொழி வழங்கும் நாட்டின்கண் நிகழுஞ் செயல்களையும், உலவும் செய்திகளையும், பயிலும் பண்புகளையும் அறிந்து, உரை நடையாலும் பா நடையாலும் இயற்றி அருள்கின்ற நூல்களின் தொகுதியே இலக்கியம் எனப்படும். கலைகளிலெல்லாம் சிறந்தது இலக்கியம்; வாழ்க்கையைப் பழுதற்ற நிலையிற் காட்டி, மேன்மையான நினைவுகளில் நம் மனத்தைச் செலுத்தி மாண்பயன் விளைப்பது இலக்கியம்; இவ்வுலக இன்பங்களிலெல்லாம் மேம்பட்ட பெரிய இன்ப நிலையை அளிப்பதும் இலக்கியமே.

இலக்கியமே தோன்று தொட்டு இன்று வரை எல்லா நாடுகளிலும் வாழ்ந்து வரும் மதிநலம் வாய்ந்த மக்களால்

பெரிதும் போற்றப் படுகிறது. "செய்கலைக்கரசி செய்யுள்"* என ஆங்கில மொழியில் வழங்கும் கருத்து, நம்மனோர் அறிதற்குரியது. ஆகவே, செய்யுளிலக்கியமும் அதனைப் படைத்தருளிய ஆசிரியன்மார் பான்மையுமே இக்கட்டுரைக் கண் சிறந்து எடுத்து விளக்கப்படும். இலக்கியப் படைப் பாளர் இவ்வுலக மேம்பாட்டிற்கு எவ்வளவு நன்மை செய் கின்றனர் என்பதை மந்தமதியினர் அறியார்; எனினும், சிந்தனையில் சிறந்தோர் சிறிதாயினும் அறிந்திருப்பர். நிற்க

தொழில் துறை வல்லாரும், அறிவியல் அறிஞரும், மக்கள் வாழ்க்கைக்கு, எத்தனையோ நன்மைகள் ஏற்படுத்தக் காரணராக இருந்தார்; எனினும், அவை, புறத்தில் விளை வனவே அன்றி, வேறென்ன? மற்று, மக்கள் அழுக்காறு அவா வெகுளி இன்னாச்சொல் இன்னபிற இழுக்கான எண் ணங்களினின்றும் விலகி, நல்லியல்பு சான்ற மேலோரை எஞ்ஞான்றும் நினைந்து பண்பில் மேனிலை அடையவும், பகுத்தறிவாளராக விளங்கவும், குழப்பமே மிகுந்த உலகில் குற்றமற்ற, மனநிறைவான மாண்புடை இன்பம் எய்தவும், இலக்கியங்கள் இயற்றும் புலவர்களே காரணராக இருக் கின்றனர். இருசார்பாளரும் நமக்கு வேண்டும்; என்றாலும், கருவிலே திருவுடைய கவிஞர்கள், ஞாலத்திற்குச் சாலவும் விளக்கம் எய்துவிக்கின்றனர் என்பதை நுட்ப அறிவினர் நுனித்துணரலாம்.

இலக்கியப் படைப்பாளர் இன்னொரு வகையாலும் தனிச் சிறப்புடையவராக இலங்குகின்றார். அன்னார் இயற்

* Poetry is the queen of arts.

கையாகத் தாம்பெற்ற தனித்த அருளாற்றலால் இலக்கியத்தை ஆக்கி அளிக்கின்றார். சான்றாக, இளங்கோ அடிகள், நெஞ்சையள்ளுஞ் சிலப்பதிகாரம் எனும் தித்திக்கும் முத்தமிழ் இலக்கியத்தை இனிய செஞ்சொற்களால் அருள் கனிந்து ஆக்கித் தந்திராவிடின், பிறிதொரு புலவன் அத்தகைய அரிய பெரிய நூலைப் படைக்க முடியுமா? ஆனால், கொலம்பசு என்பார் அமெரிக்க நாட்டைக் கண்டறிந்திராவிடின், வேறொருவர் பின்றைக் காலத்தில், அந்நாட்டைக் கட்டாயம் கண்டு பிடித்தே காட்டுவார். ஆகவே, * கூட்டு முயற்சிகளாற் பிறக்கும் கண்டுபிடிப்புகள் கருவிகள் ஆகியவற்றிற்கும், தனித்த அருளாற்றலால் பிறக்கும் இலக்கியப் படைப்பிற்கும் இடையேயுள்ள பெருத்த வேறுபாடு தெற்றெனத் தெரிந்துகொள்ளப்படும்.

இலக்கியம் அல்லாத பிற கலைகளைக் கற்றுணரவும், கற்றுத் தேர்ச்சியெய்தவும் கலைபயில் மன்றங்களும் I ஆய்வுக்களரிகளும் எண்ணற்றன. ஆனால், சிறந்த இலக்கிய ஆசிரியன்மார் உருவாகிவரப், பயிற்சிசெய்யும் சாலைகள் யாண்டாயினும் எக்காலத்திலாயினும் இருந்தனவோ? உள்ளொளி பெருகப் பெற்ற புலவர்கள், தாம் கண்ட உலகியல் நிகழ்ச்சிகளைக் கூர்ந்துணர்ந்து, மாசுநீக்கித், தமதாக்கிப் பின், உயர்ந்த நிலையில் கலையாக்கி அளிக்கின்றார்கள்.

* Science is a co-operative enterprise, the work of many minds while art is the work of solitary genius—Formative Ideals. P. 49.

I Laboratory.

அத்தகைய உயர் பிறப்பாளர், நாம் காணும் இம் மாசு படிந்த, இழுக்கு நிறைந்த உலக நிகழ்ச்சிகளைத் தமது ஒரு தனிப் பேராற்றலால் மாற்றி, உயர்ந்ததோர் நினைவுலகத் திற்கு, நம்மை ஈர்த்துச் செல்லும் வண்ணம் இலக்கியம் இயற்றுகின்றனர்.

இலக்கிய ஆசிரியன்மார் பலருள்ளும், இயல்பாகவே உள்ளுள்ளிருந்து எழுதரும் ஓர் ஆற்றலால் தூண்டப்பெற்ற ஒண்மையாளர் சிலரே. அவர்கள்தாம், நிலையான பயன்தரக் கூடிய, மக்களின் பண்பைப் பேணி வளர்க்கத் தக்க இலக் கியப் படைப்பாளராவர். அல்லாமலும், இன்னல் நிறைந்த இவ்வுலக வாழ்வின் இருட்டன்மையை உவர்த்து, அழியா இன்ப வாழ்வை நாடும் மன எழுச்சிக் குரிய வித்தூன்றத் தக்க இலக்கியம் இயற்றும் செந்நெறியில் செல்பவராவர். ஆயிரத்தில் ஒருவரே புலவராக முடியும். இல்லையெனின், இலக்கணத்தைக் கசடறக் கற்றவரெல்லாம் பாட்டெழுதி விடமுடியுமே! முடிகின்றதா? அவ்வண்ணம் சில்லோர் இக்காலத்தில் எழுதும் பாட்டுக்களும், கற்றறிந்தோர் என்ஞ ஞான்றும் போற்றும் சீர்மையனவாக இருக்கின்றனவா ? இலவே! ஆ ஞ ல், இலக்கண இலக்கியங்களிற் பயிற்சி பெரிதும் வாயாத பலர், பல காலங்களில் பல நாடுகளில் பற்பல நூல்களை இயற்றி எவ்வளவு நன்மை விளைத்திருக் கின்றனர்! ஆராய்ந்து கண்டால் உ ண் மை புலப்படும். இஃது ஒரு புறம் இருக்க,

இயல்பாகவே எவ்வளவுதான் ஆற்றலுடையவர் எனி னும், அத்தகைய அறிவாற்றலொளி, அறியாமை மாசு

கவியப்பெற்றே இருக்கின்றது; ஆதலின், செயற்கையாகக், கல்விப் பயிற்சியின் காரணமாக, அறியாமை இருட்சீத்து, அறிவொளி கிளர்ந்தொளிரச் செய்தாலல்லாமல், அன்னார் இலக்கிய ஆசிரியன்மார் என மலரப் பெறுதல் அரிதே. கல்வியின் பயன், பாசிபோல் படர்ந்த அறியாமையையும் புன்மையான தன்மையையும் நீக்குவதும்; உள்ளடங்கியிருக்கும் ஆற்றலை வெளிப்படச் செய்வதும் ஆம் என்று விரிந்த அறிவினோர் விளக்குவதும் தெரிந்துகொள்ள வேண்டியதாகும். எனவே, சிறிது கல்விப் பயிற்சி பெற்றிருப்பினும், இயற்கையாகவே அருட்டிருவுடையார், இலக்கிய ஆசிரியராகத் திகழ்வதும், தமக்கே உரிய தனித்த ஆற்றலால் இலக்கிய ஆக்கம் விளைப்பதும் ஒருதலை.

ஜோதி அச்சு நிலையம், திருநெல்வேலிச் சந்திப்பு.

# இலக்கியப் படிப்பு

இலக்கியம் என்பது, மொழிவல்லார் உரைநடையானுஞ் செய்யுள் நடையானும் இயற்றியருள்கின்ற நூல்களின் தொகுதியாகும் எனவும்; இது கலைகளுள் ஒன்றாகவும் உயர்ந்ததாகவும் பன்னாட்டுப் பன்மொழியறிஞர்களால் பண்டு தொட்டு மதிக்கப்படுவது எனவும்; மக்களாய்ப் பிறந்தார்க்கு, இதன் படிப்பு இன்றியமையாததாகும் எனவும்; நுண்ணறிவுடையார் எல்லாரும் நுனித்துணரா நின்றார். உலகில் மக்களால் ஆக்கப்பட்டு வழங்கிவரும் திருந்திய மொழிகளிலெல்லாம் நல்லிலக்கியம் உண்டு என்பதும்; இதனால் இவ்வுலக வாழ்வில் வேறெதனாலும் விளையாத பெரிய இன்பத்தை, அவ்வம்மொழியார் ஆரத் துய்த்து வருகின்றார் என்பதும் சிறிதறிவுடையார்க்கும் மிகத் தெளிவாய்த் தெரிந்திருக்கும்.

பல மொழிகளிலும் நல்லறிவாளர் நல்கிய நலமுடைய இலக்கியங்களை மாசறக் கற்ற புலவரெல்லாரும் அவற்றையெல்லாம்விட, உயர்தனிச் செம்மொழியாகிய நந்தமிழ் மொழியின் இலக்கியம், தன்னிகரற்ற தனிச் சிறப்புடையதாகும் என நன்கெடுத்துக் காட்டியுள்ளனர். பிற நாட்டு நல்லறிஞர் பெரிது விதந்தெடுத்துப் பேசியது போலவே நாலடியார் எனும் நறுந்தமிழ் நூல், தன்கண் கொண்டுள்ள தண்டமிழ்ச் செய்யுள் ஒன்றினால், தமிழிலக்கியந் தரும் தூயநல் இன்பம் விண்ணாட்டின் கண்ணும் காணமுடியா

தென வன்மையாய் எடுத்தோதுகிறது. நாலடிப் பாட்டியற்றிய, உலகியல் இன்பமுந் துன்பமும் நீத்தகன்ற, அருகசமயப் பெருமகனுரே அங்ஙனஞ் சொன்னுர் எனின் எம்மனோர் எது சொல்லக் கிடக்கின்றது? அதுவேயுமன்றி, வளங்கெழுமிய சிலப்பதிகாரம் வழங்கிய துவரத் துறந்த இளங்கோவடிகளும், எல்லாவற்றையும் பற்றில்லாமல் விலக்கித் தனித்திருந்து வாழ்ந்தாராயினும், நல்ல தமிழிலக்கியந்தருஞ் சொல்லரிய இன்பத்தைவிட்டொழிக்க மாட்டாராய் இருந்தாரென்பதும்; அந்த இன்பந்தான் சிந்தைக்கினிய, செவிக்கினிய தூய இன்பமாகும் என்பதும் தெற்றெனத் தெரிந்துகொள்ளப்படும். இதனுனே பாரதிதாசனும்,

"மங்கை யொருத்தி தருஞ்சுகமும்—எங்கள்
மாத்தமிழ்க் கீடில்லை என்றுரைப்போம்"

என அகமலி யுவகையொடு கிளந்து கூறினர்.

"தவலருந் தொல்கேள்வித் தன்மையுடையார்
இகலிலர்; எஃகுடையர் தம்முட் குழீஇ,
நகலின் இனிதாயிற் காண்பாம் அகல்வானத்
தும்பர் உறைவார் பதி"

என நாலடி நானூறு எனும் நற்றமிழ் நூல் நவிலும் பாட்டு, இலக்கியப் படிப்பின் தனிச் சிறப்பினையும், இன்றியமையாமையினையும், இலக்கியத்தால் எய்தலாகும் இணையற்ற இன்பம் ஈதெனவும் விளக்குதல்கண்டு தெளியப்படும். இன்னும்,

"விலங்கொடு மக்கள் அனையர்; இலங்குநூல்
கற்றாரோ டேனை யவர்"

என்று கூறுந்திருவள்ளுவர், மிகச்சிறந்த நூற்பெருகுதியான இலக்கியத்தைப் படித்தின்பம் நுகரும் படிப்புடையாரையே மக்கள் என்றும்; பிறர், வடிவில் மக்களாயிருப்பினும், விலங்கொடு வேறாய் வைத்து எண்ணப்படுவர் என்றும் உரைத்தமை உணர்ந்துகொளற்குரியது. நிற்க.

எண்ணும் எழுத்தும் கண் எனத் தகும் என்றார், அவ்வையார். இங்கு "எழுத்து" என இயம்பியது, இலக்கணம் இலக்கியம் ஆகிய இரண்டுஞ் சேர்ந்த இயற்றமிழையே என்பது, மொழி நுட்பம் தெரிந்தாரறிவர். எண் என்பது கணக்காகும். உலகில் உடம்பு எடுத்த மக்கட் பிறவிக்கு, மற்றைய உறுப்புக்களிலும் கண் சிறந்ததாகும் என்பதைக் "கண்ணிற் சிறந்த உறுப்பில்லை" என நான் மணிக்கடிகை நவிலும். கண்ணில்லார் கடுந்துயர் உழப்பதைக் காட்சியளவான் யாவரும் அறிவர்; கண் எவ்வளவு இன்றியமையாததோ, அவ்வளவு இன்றியமையாதது, வாழ்க்கைக்கு இலக்கியம். இன்னும், இதை, வேறொரு பழம் பாட்டின் புதைபொருளாலும் விளங்கக் காண்பாம்.

எழுத்து என வரும் இன்னோரன்ன இடங்களில், இயற்றமிழ் என்ற பொருளை அது யாங்ஙனம் பெறுமெனின் நன்று வினவினை! ஆரியப் பாணினிக்கும் தூரியமேற்புல யவன அரித்தாட்டிலுக்கும் காலத்தால் மிக முந்திய, பழமை வாய்ந்த தொல்காப்பியர் நூலுக்கு, அவரொடு ஒருங்கு கற்ற ஒரு சாலை மாணாக்கரான பனம்பாரனார்

பாயிரஞ் செய்தார். அதன்கண் "மயங்கா மரபின் எழுத்து முறை காட்டி" என வருந் தொடர்க்கு, ஆசிரியர் சிவஞான முனிவரர், "இயற்றமிழும் இசைத் தமிழும் நாடகத் தமிழும் முன்னூலுட்போல விரவாத தன்மையானே, இயற்றமிழை வேறு பிரித்து முறையானே உலகிற்கு அறிவித்து" என்றுரைக்கும் உரையான், எழுத்து, இயற் றமிழ் குறித்து வந்தது என்பது அறியற்பாற்று. இனி, எழுத்து, சொல், பொருள் என்பன முறையே இயல் இசை நாடகம் ஆயினமையும் மதிநலம் வாய்ந்தாரறிவர். இதனை நினைவிருத்திக்கொண்டு, பின்வரும் பழஞ் செய்யுட் பொருள் காண்குவம்.

"எழுத்தறியத் தீரும் இழிதகைமை; தீர்ந்தான்
மொழித்திறத்தின் முட்டறுத்தா னாகும்—
மொழித்திறத்தின்
முட்டறுத்த நல்லோன் முதனூற் பொருளுணர்ந்து
கட்டறுத்து வீடு பெறும்".

இயற்றமிழறிவு வாய்க்கப் பெற்றார் இழிதகவு நீங்கப் பெறுவர்; அஃதெதனால் எனின், இலக்கியப் படிப்பினால் உள்ளம் அடையும் இன்பமும் பயனும் மிகப் பெரிய வாகலின், தீய நினைவு எழப்பெறாது இழிதகைமை விலகப் பெறுவர் என்பது, எள்ளினின்று எண்ணெய் எடுபடுவது போல, இலக்கியத்தினின்று இலக்கணம் எடுபடுவதால் இரண்டும் ஒன்றே; ஆதலான், ஈண்டு இலக்கியத்தையே சிறப்பாயெடுத்துச் செப்புவது இழுக்காகாது. இலக்கிய இன்பத்தால் உள்ளந் தூய நிலை அடையப்பெறுவதல்லாமல்,

மொழியிலே ஒருவற்கேற்படும் முட்டுப்பாடு நீங்கிவிடும். மொழி முழுதும் பழுதறவுணரும் பெற்றிமையும் தூய இன்பமும் பெறும் பெறலரும் பேற்றினல், அவ்வழியே, வீடு பெறுவதற்கடிப்படையான விழுமிய மெய்யுணர்வு கைவரும்; கட்டறும், என்றிவ்வகையாக, இலக்கியப் படிப்பின் இன்றியமையாமையை இப்பாட்டு எளிதாக எடுத்தியம்புதல் சாலவும் விளக்கந் தருதல் காண்டற்குரியது.

இசையும் நாடகமும் காமத்தையே மிகுக்கும் என விலக்கியொழித்த புத்த சமண் சான்ருேர், இலக்கியத்தின் மேன்மையைப் பகுத்துணர்ந்து, நாலடியார் மூலமும் பிற நற்றமிழ் நூல் வாயிலாகவும் உறுதியாய் உரைத்துத், தாமும் இலக்கிய இன்பம் ஆர நுகர்தலில் தணியா வேட்கையுடையராய்த், தண்டமிழ் மொழியின்கண் ஒப்புயர்வற்ற நூல்கள் இயற்றியருளிய திறத்தை நடுநிலையில் நோக்கவல்லார், இலக்கியப் படிப்பு எவ்வளவு இன்றியமையாதது என்றுணர்தல் ஒருதலை.

# இலக்கியத் தொடர்பு.

இலக்கியம் பஃறிறப்படும்; அவற்றுள்; அறிவும், உணர்வும் பண்படுதற்குப் பயன்படும் இலக்கியமே, நூலறி புலவர்களால் கொண்டாடப்படும். அதன் தொடர்பே நம் மனோர்க்கு நலம்பயக்கும். நிற்க,

பண்பாடுடையவர்களின் தொடர்பு, அறிவும் இன்பமும் மேன்மேல் மிகுவதற்குக் காரணமாயிருப்பது போலவே, நல்லிலக்கியத்தின் தொடர்பு, உணர்வும் உவகையும் பெருகுவதற்கு ஏதுவாயிருக்கின்றது. நுண்ணறிவும் நூலறிவும் ஒருங்கமைந்த சான்றோன் ஒருவன், உண்மை அறிவு இன்பம் அமைதி ஆகியவற்றால் தன்மனம் நிறைவதற்குத் துணைபுரியும் நூல்களையே நனிவிரும்பிக் கற்க முற்படுவான். மற்றை வெற்றாரவாரச் சிற்றின்ப நூல்களை அன்னான் அவ்வளவாகப் பண்டஞ் செய்வான் அல்லன்.

இனி, ஏடுகள் என்பன எல்லாம் ஒன்றைப் பின்பற்றிச் செய்யப் பட்டனதாம். *இயற்கையைப் பின்பற்றியும் இன்னொருவரைப் பின்பற்றியுமே பெரும்பாலும்

---

*Imitations are of two kinds: one of nature, one of authors. The first we call originals, and confirm the term imitation to the second. Edward Young,
in his essay on "Original composition"

கலைகள் அத்தனையும் முகிழ்க்கின்றன. காலைக் கதிரின் கண்கவர் காட்சியையோ, மாலை மதியத்தின் மண்புகழ் மாட்சியையோ, கோல மயிலின் ஒய்யாரமான ஆட்டத்தையோ, மேகக் கூட்டத்தின் விளிம்புகளிலே தெரியும் பொன்னொளிச் சிதறல்களையோ, காட்டகத்தே காணப்பெறும் களவியற்செய்தியையோ, நாட்டகத்தே நடைபெறும் நற்போர் நிகழ்ச்சிகளையோ, வேந்தரின் வேழப் படை வெட்டவெளியில் அணிவகுக்கும் ஆரவாரமான இயல்பையோ இன்ன பிறவற்றையோ கலையாக்குவோன் இயற்கையைப் பின்பற்றுகின்றான்.

இங்ஙனம் ஆக்கிய கலையொன்றைக் கண்டு, களி கொண்டு, தனது அறிவின் துணையால் சிறிது கூட்டியுங் குறைத்தும் மாற்றியும் திரித்தும் மெருகேற்றிப் புதிதாகப் படைப்போன் இன்னொரு வரைப் பின்பற்றுகின்றான். ஆனால், இவ்விருதிறக் கலைஞர்களும் படைப்பன, கலைகள் என்று அறிஞர்களால் கொண்டாடப்பட வேண்டுமானால், அவை, அழகுடையனவா யிருத்தல் வேண்டும். என் எனின், கலைக்கு உயிர் அழகே ஆகும்.

அழகு என்றால் என்னை ? எனிற், புகல்வாம். கண்ணையும் மனத்தையுங் கவர்ந்து இன்புறுத்துவன எல்லாம் அழகென்றே சொல்லலாம். நீலநிற வானத்தில் நிலா உலாவருகின்றது: காண்பதற்கு அழகாக இருக்கின்றது. ஆனால், அக்காட்சி, கலையாகாது. அதனை ஓர் ஓவியன் எழில்படத் தீட்டிக் காட்டினால் மட்டும், அது கலை என்று கண்டார் கொண்டாடும் நிலைபெறும். அதனை

ஒரு புலவன், நீல நிறமாகிய வானத்தை ஆடையாகக் கொண்டு, தன் தங்கம் போன்ற அங்கம் முழுதும் மறைத்து, ஒரு பெண் தன் வண்ண முகத்தை மட்டும் வெளியே காட்டுகின்றனளே! ஆ! அந்த ஒளி முகத்தைக் கண்டதுமே உள்ளம் களி கொள்கின்றதே!! அவளது துவளும் உடலின் வனப்பு முற்றுங் காண நேர்ந்தால், ............... என வியப்புற்று,

> **நீலவான் ஆடைக்குள் உடல்ம றைத்து**
> **நிலாவென்று காட்டுகின்ருய் ஒளிமு கத்தைக்**
> **கோலமுழு தும்காட்டி விட்டால். இன்பக்**
> **கொள்ளேயிலே இவ்வுலகஞ் சாமோ?**

என்று பாடிக் காட்டினுல், அஃது அழகாக இருக்கின்றது. எனவே, இது கவிதைக்கலே என்று கற்றறிந்தார் ஏத்தும் நிலே பெறுகின்றது. நிற்க,

அழகு பலவகைப்படும். சிலந்தியின் வலே, விலேமகளிரின் விழி, ஏமாற்றுக் காரர்தம் மொழி, நச்சுப் பாம்புகளின் மேனி இன்ன பிறவெல்லாம் தோற்றத்தால் அழகாகக் காணப்பட்டாலும், செயலால் துன்பஞ் செய்வன ஆதலால், அவற்றை அழகுடையன என்று ஆன்ருேர் போற்ருர். மாருக, வெளித்தோற்றத்தில் அவ்வளவு அழகில்லாவிடினும், கருத்துக்குக் களிப் பூட்டுவன வற்றைக் கவின்பெறு வனப்பின என்றே அன்னுர் காண்பர், களிப்பர், கைபுனேந்தியற்றிக் கலேயாய்ப் படைப்பர், நுகர்வர்.

இனி, அழகுஞ், சொல்லழகு பொருளழகு எனப் பல வகைப்படும். செய்யுளிற் காணும் அழகு, அணி என்று பாராட்டப்படும். அழகு, இன்பந்தருவதுடன் நில்லாமல், நம் வாழ்க்கைக்கு நல்வழி காட்டுவதாயும் அமைதல் வேண்டும். எனவே, அழகுக் கலைகளுள் ஒன்றாகிய இலக்கியம், இன்பம் ஈவது, நன்னெறி நல்குவது என்றிரு வகைப்படும் என்று பிரித்தறிந்து கொள்ளப்படும்.

இங்ஙனம் இலக்கியம் போன்ற கலைகளின் வாயிலாக வரும் இன்பம், பொதுமக்களும் ஏனை மாவும் புள்ளும் முதலாயினவும் கண்டு கேட்டு உண்டு உயிர்த்து உற்று அடையும் ஐம்புல இன்பம் போலாமல், அறிவின் வாயிலாக வருவது ஆதலின், தூயது, பெரியது, உயர்ந்தது என்று துணிந்துரைக்கலாம்.

இன்னும், இலக்கியம் நல்லொழுக்கத்தைப் புகட்டி, நம் மனத்தைப் பண்படுத்தி நம் வாழ்க்கைக்கு நல்வழி காட்டுவதா யிருத்தலின், அஃது ஒருவனுக்கு ஆராய்ச்சி என்ற வாளும், அறிவு என்ற கேடகமும், துணிவு என்ற கவசமும், ஆன்ம நல்லுணர்வு என்ற பொன் அணிகலனு மாய் அமைகின்றது.

எனவே, இலக்கியத்தொடர்பு எல்லார்க்கும் விழுப்பந் தரும்; ஏன் எனின், நல்லிலக்கியமானது நமது அறிவு விரிவதற்கும் மனம் பண்படுதற்கும் நிரம்பவுந் துணைசெய்து நிற்பதோடு, இவ்வுலக வாழ்வில் வேறு எதனாலும் விளையாத இன்பவுணர்வை வற்றாமல் வழங்கிக்கொண்டே இருக்கின்றது.

# புத்தகப் படிப்பு

கற்கத் தகுந்த நூல்களைக் கற்கும் ஆர்வம் இல்லாத மாந்தர், இந்த உலக வாழ்வில் அடையவேண்டிய தூய நல் இன்பத்தை அடையப் பெற்றிலர் என்றே சொல்ல வேண்டும். ஆனால் அறிவை மழுங்க வைக்கும் புளிப்புச் சுவையுள்ள நூல்களை நிரம்பக் கற்பதும், அறிவை விளங்க வைக்கும் காப்பியச் சுவையுள்ள நூல்களை முறை தெரியாது குறைபடக் கற்பதும் மிக மிக இரங்கற்பாலனவாகும். படிக்கும் முறை எது? எனின், படிக்கத் தகுந்த நல்ல நூல்களைத் தெரிந்தெடுத்தலும், அங்ஙனந் தெரிந்தெடுத்த நூல்களைச் சரியான வழியிற் பயன்பெறப் படித்தலு ஆம்.

ஆங்கில மொழி வல்ல நல்லிசைப் புலவரான இரசிகர் என்பார், நூல்களை இரு பிரிவாகப் பாகுபடுத்திச் சொல்லியிருக்கின்றார். அவ்வவ்வேளைக்குரிய நூல்கள் என்றும் எஞ்ஞான்றும் பயன்படுஞ் சுவடிகள் என்றும் அவர் விளக்கினார். அவ்வவ்வேளைக்குரிய நூல் என்பது, பெரும்பாலும் அந்நூல் எழுந்த காலத்து நிகழ் பொருள்களைப் பற்றிய வேடிக்கையுரையாகவோ, கருத்துச் செறிவுடைய கட்டுரை கதைகளாகவோ, சிறிது புனைந்துரையாகவோ, பொருளொடு புணராப் பொய்மொழியாகவோ இருக்கும். ஆனால் இத்தகைய சுவடிகளையே பெரிதெனக் கொண்டு, காலமெல்லாம் கற்பதில் போக்கி, மிகவுயர்ந்த சாவா நூல்களைப் படிக்காமல் கைவிட்டிருத்தல் மிகவும் வருந்தத்தக்க

தாகும். ஏனென்றால், இவ்வுலகிலுள்ள சிறந்த சிந்தனை யாளர் அரிது முயன்று ஆராய்ந்து கண்டுகூறிய கருத்துரைகள் எல்லாம், உயர்ந்த இலக்கியங்களிலேயே இருக்கின்றன. இந்த இலக்கியங்கள்தாம், மக்கள் மனம் என்னும் மாண்புள்ள ஞாலத்தை ஆட்சிபுரியும் நிலையில் எல்லாக் காலங்களிலும் நின்று நிலவுகின்றன. நல்லறிவின் களஞ்சியங்களாய்த் திகழும் இந்த இலக்கியங்களே, உண்மையான கலைப் பண்பைக் காத்து வளர்த்துப் பேணி வருகின்றன. அல்லாமலும், உயர்ந்த நூல் என்பது கருத்துரையாலும் மொழி நடையாலும் மேம்பாடுடையதேயாகும். உயர்ந்த கருத்தைச் சிறந்த முறையில் அந்நூல் தன்கண் கொண்டிலங்கும். நிற்க,

நூறுங்கத் தின்றவனுக்கு நூறு வயது என்று பெரியோர் சொல்வர். உண்ணும் முறையைப் போன்றதே கற்கும் முறையும் என்று உரைக்கலாம். பண்டம் பலகாரங்களையும், சோறு கறி குழம்புகளையும் நாவால் நன்கு சுவை பார்த்துப், பற்களால் நன்றாக மென்று கூழ் போலாக்கிச் சிறிது சிறிதாக உள்ளிறக்கவேண்டும். அவ்வாறு அவ்வுணவு இரைப்பையை அடைந்தால்தான் உணவுக் குழலுக்கும் மற்றைய உறுப்புக்களுக்கும் தீங்கு நிகழாமல் இருக்கும். அன்றியும் செவ்வையாகச் செரிக்கப் பட்டுக் குருதியொடு கலந்து பயன் விளைக்கும் என்று உடல் நலம் விரும்புவார் சொல்வர், செய்வர். அறிவு நலம் மன நலம் இவற்றை விரும்புவாரும் படிக்கும் நூல்களை அவ்வண்ணம் பயன்படுத்திக்கொள்ளவேண்டும். ஆனால்

உணவுப் பொருள்களிற் சிலவற்றையே நாம் நறுங்கத் தின்னவேண்டியவர்களாக இருக்கின்றோம். அதுபோல, நூல்களிற் சிலவற்றையே ஆராய்ந்து கற்கவேண்டியவர்களாக இருக்கின்றோம்.

கண்ணுக்கினிய கருநாவற் கனியும், தீஞ்சுவைச் சாறுள்ள கரும்பும் பொருள் அளவினால் சிறிது பயன்படுகின்றன; உள்ளுள்ள கொட்டையுஞ் சக்கையும் பெரிது பயன்படாவாயிருக்கின்றன. இவை போலவே, கதை நூல்களிற் பல, செய்தித் தாள்களிற் பல, இன்னும் நாம் கற்கும் நம் வாழ்நாட்கால நாட்டு நிகழ்ச்சிகள் வரலாற்றுச் செய்திகள் பல, பெரிதும் பயன்தரா நிலையில் நிற்கின்றன.

நூல் பல கல் என்பது பழமொழி. நூல் கற்கும் மாணவன் கருத்தில் இருத்தவேண்டுவது ஒன்றுண்டு. அது, இது: அறிவியல் ஆய்வுக் களரியில் வாலை வடித்தல் முறையால் வந்த நீர், தூயதாக இருப்பினும் மணமுஞ் சுவையும் இல்லாமல் காணப்படும். ஆனால், குளத்தில் இருக்கும் நீரும், கிணற்றில் ஊறும் நீரும், ஆற்றில் ஓடும் நீரும், அருவியாய்ப் பாயும் நீரும் தூயதாக இருப்பதுடன் தனித்தனி மணமுஞ் சுவையும் உடையதாய்க் காணப்படும்.

மிகப் பெரிய நூலின் கருத்துக்களைச் சுருக்கித் தருஞ் சுவடிகள் வாலை வடித்தலால் வந்த நீர் போன்றவை; ஆதலின், முழு நூலின் பெருமையும் தனிச் சுவையும் அவை தம்மை நேரே பயின்றால் அல்லாமல், சுருக்கித் தருஞ் சுவடிகள் மாட்டு அறிதல் ஒல்லாது. எனவே, திருக்குறள் நூல் நயம், சிலப்பதிகார நூல் நயம், நற்றிணை விருந்து, நெடுந்தொகை விருந்து இன்னன போல்வன

வற்றைக் கற்றறிதல் இளமாணுக்கனுக்கு நன்மை பயக்கும் எனினும், திருக்குறளுஞ் சிலப்பதிகாரமும் நற்றிணையும் அகநானூறும் முழுதும் முறையாகப் பயின்ருல், அறிவில் ஊறி உணர்வில் இனித்து மகிழ்விக்கும் காப்பியச் சுவை யெல்லாம் சுருக்கச் சுவடிகள் முற்றுந் தருவதில்லை என்று தெற்றெனத் தெரிதல் வேண்டும். நிற்க.

நூல்களையெல்லாம் சுவைக்காகச் சில, நடைநலனுக் காகச் சில, சொல் அழகுக்காகச் சில; பொருட் பொதிவுக் காகச் சில, நோக்கத்திற்காகச் சில, அமைப்பு முறைக் காகச் சில, பொழுது போக்கிறகாகச் சில என்ற முறையில் கற்றுக்கொள்ளவேண்டும். சிற்சில பகுதிகளின் நலன் காரணமாக நூல்களைக் கற்பார் உளர்; அத்தகைய நூல் களின் ஏனைய பகுதிகளை அன்னர் கற்பாரல்லர். ஆனல் மிகச் சில நூல்கள் எஞ்ஞான்றும் ஆழ்ந்து நுணுகிக் கற்கப் படும்; அவற்றைக் கற்கும் ஆர்வலர் முழுமையும் வழுவற வுணர்ந்து கற்றுப் பயன் பெறுவர்.

படிப்பதற்குரிய பயன் தரு நூல் ஒன்று கிடைக்கு மானல், அதைக் கருத்து ஊன்றிக் கசடறக் கற்கவேண்டும். நூலில் ஒரு பகுதியையோ, ஒரு கட்டுரையையோ படித் ததும் அதன் உள்ளுறை பொருளைத் தெளிவுறத் தெரிதல் வேண்டும். தெரிந்துகொள்ள முடியாவிடின், மறுபடியும் படித்துணர்ந்து பின்புதான் பிற பகுதிகளை அல்லது கட்டுரைகளைக் கற்க முனையவேண்டும். கற்ற கருத்துக் களைச் சிந்தனை செய்து மனத்தில் பதியச் செய்யும் பண்பு வளரவேண்டும்.

எனவே, திரைப்படக் கதைகளையும் உரையாடல்களையும், புற்றீசல்கள்போல் வெளிவந்துலவும் புதினங்களையும் ஏனைச் செய்தி இதழ்களிற் காணும் ஆரவாரமான அரசியற் கட்டுரைகளையும், நகைமொழித் துணுக்குகளையும் இவை போல்வன பிறவற்றையும் பெரிதார்வங்கொண்டு படித்து வரும் தமிழிளைஞர், இங்கெடுத்துக் கூறும் கருத்துக்களைப் பொறுமையுடன் படித்துப் பார்த்து நலம் பெறவேண்டும். ''குணம் நாடிக் குற்றமும் நாடி அவற்றுள் மிகைநாடி மிக்க கொளல்'' என்ற திருவள்ளுவர் உரையை, ஆளைத் தீர்மானிக்கவும் செய்தித் தாளைத் தீர்மானிக்கவும், ஏனை எல்லா நிகழ்ச்சிகளையும் ஏடுகளையும் தீர்மானிக்கவும் வழிகாட்டியாகக் கொள்ளல் வேண்டும்.

நன்றுந் தீதும் ஆய்ந்துணராமல் கற்றவற்றை உளங் கொள்ளுதல் சாலவும் தீமை பயக்கும்; ஆகையால் பள்ளிப் படிப்பில் நிற்கும் இளமாணாக்கர், பொதுநல் அறிவு வளர விரும்பிக் கற்கும் நூல்களை, நல்லாசிரியர் வாய்க் கேட்டுணர்ந்து வாங்கிக் கற்றுப் பயன்படும் கருத்துக்களை மட்டும் அறிந்து நடக்க முற்படவேண்டும். சிறு கதை நூல்களையெல்லாம் தவளைப் பாய்ச்சலைப்போல் கற்று முடித்துவிடலாம். சிறந்த நல்லறிவு நூல்களையோ நண்டு நடப்பதுபோலவும் நத்தை ஊர்வதுபோலவும் மெல்ல மெல்ல ஆராய்ந்து கற்று அறிவு நிரம்புதல்வேண்டும்.

கடைசியாகச் சிறு நல் அறிவுச் சுவடிகளைக் கற்க முற்படும் அருந்தமிழ்நாட்டுப் பெருந்தமிழ் மாணவர்க்கு ஒன்று மட்டும் இங்கு நினைவுகூரற்பாற்று. ஆங்கில மொழியில் நல்லாசிரியர் ஒருவர் சொல்லியவாறு மற்றவர் பேசுங்

கருத்துரைகளைக் குழப்புவதற்கோ, அவற்றை மறுப்பதற்கோ நூல்களைப் படித்தலே வேண்டாம்; அது சிறுமையே விளைவிக்கும்; அல்லாமலும், அறியாமையை மிகுக்கும். இன்னும், எப்பொருள் பற்றி யார் யார் எழுதிய ஏடாயிருந்தாலும், அதிற் காணும் கருத்துக்கள் அப்படியே ஏற்றுக் கொள்ளப்படுவதும் அல்லது தூற்றித் தள்ளப்படுவதும் படிப்பார்க்குப் பண்புடைமையாகாது. மற்றும், பயனில் சொல் பாராட்டுவதற்காகப் பல நூல்களையும் படித்தல் நினைந்திரங்கற்குரியது. வீணுரை மொழிந்து காலமெல்லாம் போக்குபவர் தம் நூலறிவு கண்டு நல்லோர் நாணுவர், நகைப்பர்.

ஆகவே, தகுந்த நூல்களைக் கற்று, மிகுந்த அறிவு நலம் பெற்று விளங்க விரும்பும் நம்மனோர், நூல்களிற் சொல்லப்படும் கருத்துக்கள் எவையாயினும், எவர் எடுத்து இயம்பியிருந்தார் ஆயினும், அவற்றை எடை போட்டுப் பார்க்கவேண்டும். பயனில்லாத கருத்துக்களைப் பகுத்தறிந்து விலக்கிப், பயனுடையவற்றையும் நயனுடையவற்றையும் நன்கு ஆராய்ந்து நாளும் கற்று, வாழ்க்கையிலும் கடைப்பிடித்தொழுக விரைதலே, படிக்கும் முறை தெரிந்து புத்தகங்களைப் படித்ததனாலாய பயன் என்று அறிதல் வேண்டும்.

# அவ்வையார்

பின்றைக் காலத்தில் இருந்த சின்னஞ் சிறிய புலவர்களுள் ஒருவர், அவ்வையார் என்பதும், நக்கீரர், கல்லாடர் என இடைக்காலத்து எழுந்துலவிய புலவர் பெயர் போலவே, சங்கப் புலவர் பெயர் தமக்கு வைத்து வழங்கித் தமிழகத்து வாழ்ந்த அவ்வையார் அவர் என்பதும் அறியற்பாற்று.

சங்கத் தமிழ் நாட்டில் எங்கும் புகழ் சிறந்து திகழ்ந்தவர் அவ்வையார். அவரது இயற்பெயர் ஈதென அறியுமாறில்லை. அவர் பெண்பாற் புலவராக இருந்தமையானும், பெருமுது பருவம் எய்திய ஞான்றும் திருமணம் புரிந்ததற்கு ஏதொரு சான்றுதானும் இன்மையானும், அதியமான், ஒரு கால் தன்னையுண்டாரை நெடிது வாழச்செய்யும் நெல்லிக்கனி பெற்று, அதனை அவ்வையார்க்கு ஈந்து நீடினிது வாழச் செய்தமையானும், அவர், தண்டமிழ் மக்களே தம் மக்கள் என நினைந்து, அருள் கனிந்து எழுகின்ற பாக்களால் பார் முழுதும் பகுத்தறிவு பரப்பியமையானும், அக்காலத்துச் செந்தமிழ் மாந்தரும் வேந்தரும் அவரைத் தம் அரும் பெறல் அம்மை என வாழ்த்தி வணங்கினர். அம்மை என்ற முறைப் பெயர் அவ்வை என்றாகி, ஆர்விகுதிபெற்றுச் சிறந்து அவ்வையார் என வழங்கிற்று.

"தேமொழி யுரைத்தது செவ்வை நன்மொழி" என்பது சிலப்பதிகாரம். செம்மை என்ற பண்புப் பெயரின் மெல்லிய இனிய சொல்வடிவே, செவ்வை என இளங்கோவடிகள் இயம்பினர். அதுபோல அம்மை என்ற முறைப் பெயர் அவ்வை என ஆயினமை தெளிக.

ஐ ஔ என்ற இரண்டு எழுத்துக்களும் மிகப் பழங் காலத்தில் இல்லை (எழுத்தின் கதை—மு. வ. பக்கம் 38) என்பதாலும், "அவ்வை" முந்திய வடிவம்; ஔவை அதன் போலி (தொல் - எழுத்து - நச் - உரை அடிக் குறிப்பு பாவாணர் பக்கம் 51) என்பதாலும்; துவக்கப்பள்ளி மாணுக்கர்களும் மயக்கமும் தயக்கமும் இன்றி அவ்வை என்ற சொல்லை எளிதாய் எழுதமுடிவதாலும்; அங்ஙனம் எழுதினுலும், பொருள் சிறிதும் மாறுபாடடையாமல் எவரும் தெற்றெனத் தெரிந்துகொள்ளலாம் ஆதலாலும்; முந்தியதும் மொழிப் பொருட் காரணஞ் சிவணியதும் ஆகிய அவ்வையார் என்ற சொல்வடிவை வழங்குதல், தப்பு என்று தள்ளத்தக்கதன்று என்றும், ஒப்பு என்றுரைத்துக் கொள்ளத்தக்கதாகும் என்றும் இங்கெடுத்து காட்டப் பட்டது.

# புதினப் படிப்பு

புதினங்கள் எல்லாம் பொய்க் கதைகள்; ஆதலின், அவற்றைப் படிப்பது நன்றன்று என்பது கற்றறிந்தார் சிலர் கருத்தாகும். மிகவுயர்ந்த காப்பியங்களைக் கற்று வாழ்க்கை நெறியை வகுத்துக் கொள்வதில் நிரம்பவும் கருத்துடன் இருக்கவேண்டியவர்களாகிய இளைஞர், வெறுஞ் சிறு கதைகளை மட்டுமே படித்துக்கொண்டு நேரத்தையும் முயற்சியையும் வறிதாய்க் கழிப்பது இரங்கத்தக்கதாகும் என்று அன்னார் கருதுகின்றனர்.

ஆனால், ஆழ்ந்து எதையும் கற்று ஆராயும் ஆர்வமில்லாத இக்காலத்து இளைஞர்களின் கண்முன், கணக்கற்ற புதினங்கள் குவிந்து கிடந்து, அவர்களின் பொழுது போக்கிற்கேற்றவையாய்த் தோற்றஞ் செய்கின்றன. அன்றியும், இழிந்த சுவையுடையதனையே காமுறும் இயல்பு பெரிதும் வாய்ந்த இளைஞர், இன்ப வேட்கையை எழுப்பும் புதினங்கள்தாம் புற்றீசல்போல் புறம் போந்துலவக் காண்கின்றனர். இங்ஙனம் இவர் பொருட்டு எழுதி வெளியிடப் படும் புதினங்கள்தாம், விளம்பரமும் வருவாயும் எளிதிற் பெறுகின்றன. என்றாலும், ஓரிரு புலவர் நல்ல புதினங்களும் மெல்ல எழுதிச் சிறிது நன்றாற்றுகின்றனர். நிற்க,

எம் கருத்துக்கிணங்கப் புதினங்களெல்லாம் உரை நடைக் காப்பியங்களேயாகும். வரைவாளருள் தலைசிறந்தோர் படைத்தளிக்கும் புதினங்கள் மட்டுமே நம் வாழ்க்கைக்கு நல்வழி காட்டுவனவாகும். பாநடைக் காப்பியங்

களுட் சிறந்தன எவ்வாறு "மக்கள் மனம் எனும் மாட்சிசேர் நாட்டை ஒக்கச் செங்கோல் ஓச்சி" ஆள்கின்றனவோ, அவ்வாறுதாம் உரைநடைக் காப்பியங்களும். ஆதலின், தண்டமிழ் இளைஞராவார், தாம் விரும்பும் புதினங்களைத் தெரிந்தெடுப்பதிலும், அவற்றைப் பொழுது போக்கும் முறையில் அளவாய்க் கற்பதிலும் விழிப்பாயிருத்தல் வேண்டும்.

புதின வரைவாளருள்ளுஞ் சிறப்புடையார்தாம் யாவர்? எனிற், புகல்வாம், மொழியறிவில் தேர்ச்சி பெற்று எதை எப்படி எழுதவேண்டும் என்னும் அறிவு பெற்று விளங்குபவரே சிறந்த வரைவாளராவார். இனி, அன்னார் தம் புதினமானது, குருத்திலிருந்து கரும்பு கடித்துத் தின்றாற்போன்று, முதலிலிருந்து முடிவுகாறும் கற்பார்க்குக் கழிபெருஞ் சுவையூட்டி அவர் நெஞ்சைப் பிணிக்குமாறு அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும். இன்னும் உலக இயற்கைக்கும் மக்கள் மன இயற்கைக்கும் ஒத்த முறையிலேயே, கதையுறுப்பினர் பண்புகளும் பின்னப்பட்டிருத்தல் வேண்டும். அஃதாவது, உலக வாழ்வில் ஒரு சிறு பகுதிதான் இப்புதினங் காட்டுவது என எவரும் எண்ணுமாறு வரைபவரே சிறந்த வரைவாளராவார்.

எனவே, உயர்ந்த வரைவாளர் எழுதிய சிறந்த புதினங்களும் கற்றற்குரியனவேயாகும். ஆனால், புதினங்கள் படித்தற்கும் ஓர் அளவுண்டு, அவற்றைக் கற்பதன் நோக்கம், பொழுது போக்கு இன்பம் பெறல் வேண்டும் என்பதே.

# மேடைப் பேச்சு

மேடையில் நின்று அவையோரை நோக்கிச் சொற்பொழிவு நிகழ்த்துவது என்பது, ஒரு கலையாகும். கலைக்கு உயிர் அழகு. ஆதலால், சொற்களுஞ் சொற்றொடர்களும், அவை தாங்கி வரும் கருத்துக்களும் உணர்ச்சிகளும், அவற்றை எடுத்து இயம்பும்போது இருக்கவேண்டிய தோற்றமும் நடிப்பும் அழகுடையனவாய் அமைதல் வேண்டும். அவ்வண்ணம் பேச்சு அழகுடன் திகழ்ந்து கலையென்று கற்றறிந்தோர் போற்றும் நிலைபெறவேண்டுமானால், ஒருவனுக்கு மேடையேறிப் பேசும் பயிற்சியும் முயற்சியும் நிரம்பவேண்டும்.

கூர்மையான போர்வாளைத் தாங்கிக் களம் புகுந்து மாற்றாருடன் பொர முனையும் வாள்வீரன் ஒருவன், எவ்வளவு அறிவோடும் ஆற்றலோடும், தெளிவோடும் திட்பத்தோடும் அந்த வாளினைச் சுழற்றவேண்டியிருக்கிறதோ, அவ்வளவு அறிவு ஆற்றல் தெளிவு திட்பத்தோடுதான், களம் புகுந்து கருத்துரையாற்ற முனையுஞ் சொல் வீரனும், தனது நாவினை அசைக்கவேண்டியதாயிருக்கின்றது. ஏனென்றால், ஒரு சொல் வெல்லும், ஒரு சொல் கொல்லும் என்பது பழமொழி.

எனவே, சொற்பொழிவாளன், தன் பேச்சுத் திருத்தமாகவும் தீஞ்சுவை கெழுமியதாகவும் பொருத்தமாகப் பொலிய விரும்புவானானால், எடுத்த பொருளுக்கு ஏற்ற

கருத்துக்களை முன்னமேயே ஆய்ந்து தொகுத்து வைத்திருக்கவேண்டும். மேற்கோள்களாக நூற்பகுதிகள், உவமைகள், பழமொழிகள், நகைமொழித் துணுக்குகள், அடுக்குமொழிகள் முதலியன இசைவான இடமறிந்து பயன்படுத்தப்பட்டால், பேச்சாளன் தானும் இன்புறலாம்; தன் பேச்சைச் செவிமடுக்கும் பிறரையும் இன்புறுத்தலாம்.

துவக்கத்தில் மேடையில் பேசப்போவதை முன்னமே ஒருமுறை முழுதும் எழுதிப் பார்க்கலாம். இங்ஙனம் எழுதிப் பழகுவது, கருத்தொழுங்கு மொழிநடை நன்கமைய வழிவகுக்கும். ஆனால் பேச்சு முழுவதும் நெட்டுருச் செய்து பின் மேடையில் வந்து விளம்புவது சொற்பொழிவாளனது முன்னேற்றத்துக்குத் தடையாகும்.

இனி, மக்களாட்சிக் கோட்பாடு நின்று நிலவும் இக்காலத்தில், ஒவ்வொருவரும் இந்நாட்டு மண்பொம்மைகளாக இல்லாமல், மன்னர்களாக உலாவவேண்டுமானால், பேச்சுவன்மை பெற்றிருக்கவேண்டும். ஏனென்றால், ஆட்சியதிகாரம் பெற்ற தலைவர்கள், மக்களால் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள்; மக்கட் குழுவிலிருந்து தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள்; மக்களின் வசதிகளையும் குறைகளையும் கவனித்து ஆளுமாறு கண்காணிக்கப்படுகிறார்கள்.

எனவே, அறிவும் பண்பும் ஆள்வினைத் திறனும் அமைந்தோர், அரசியற் சூழ்நிலையை மாற்ற முனைய வேண்டுமானால், அன்னார், பேச்சுத் திறன் உடையவராயிருந்தால்தான், சட்டசபைகளிலும் பாராளுமன்றங்களிலும் வீற்றிருந்து, தம் கொள்கை கோட்பாடுகளை விளக்கி வெற்றிபெற முடியும்.

சொல்லேருழவர்களால் அடிமை நாடுகள் பல விடுதலை யடைந்துள்ளன. நம் நாடு ஆங்கில ஆட்சியிருந்து விடுதலை பெறப் பாடுபட்டவர்கள் பலரும் சொல் வீரர்களே! வருங் காலத்தில் நாடு வாழவும் கேடு வீழவும் பாடுபடவேண்டு மானால், குடியரசு நாட்டில் மேடைப் பேச்சாளர் மிகப் பலர் உலவுதல் வேண்டும். எனவேதான், பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் இலக்கிய மன்றங்கள் ஏற்படுத்தப்பட்டிருக் கின்றன.

'வாயுள்ளவன் பிழைப்பான்' என்பது பழமொழி. வாய் என்பது வாய் வன்மையைப், பேச்சுத் திறமையை உணர்த்தும். பேச்சு வன்மை என்பது, கற்றறிந்தார் சூழ்மிய அவையில், ஒருவன், தான் கூறும் கருத்துக்களை அன்னார் விளங்கிக்கொள்ளும் விதமாகவும், விரும்பிக் கேட்கும் வண்ணமாகவும் பேசும் ஆற்றலே ஆகும். பிறர் விளங்கிக்கொள்ளவேண்டுமானால், பேசுங் கருத்துக்கள் எளிய நடையிலும் தெளிவான முறையிலும் பொலிய வேண்டும். பிறர் விரும்பிக் கேட்கவேண்டுமானால், சொல் லுங் கருத்துக்கள் இனிய முறையிலும் பயன்மிக்கனவாக வும் திகழவேண்டும். வாய்ச்சொல் வீரர்களாக இருப் போர்தாம், ஆசிரியராகவும் வழக்குரைஞராகவும், அரசியல் தலைவராகவும் திரைப்பட நடிப்பாளராகவும் நாவலராகவும் நடமாட முடியும். பேச்சு வன்மை இருப்பின், எழுத்து வன்மை பெறுதல் எளிதே யன்றோ? ஆகவே கதை கட் டுரைகள் வரைபவராகவும், புதினங்கள் இயற்றுபவராகவும் அன்னார் வாழ்க்கை நடத்தமுடியும்.

இனி, நிகரற்ற பேச்சாளர் என்போர் நினைவாற்றல் மிக்கவர்களாக இருக்கின்றார்கள். நினைவாற்றல் பெருகப் பெறவேண்டுமானால், கட்டிளமைப் பருவந்தொட்டே நல்ல இலக்கியங்களை நெட்டுருச் செய்து வரும் பயிற்சியில் முனைதல் வேண்டும். தமிழ் மொழியிலோ எனின், தொல்காப்பியம் திருக்குறள் முதலானபழைய நூல்களையும், மறைமலையடிகள், தேவநேயப் பாவாணர் ஆகியவர்களின் ஆராய்ச்சி நூல்களையும், அறிஞர் அண்ணா, மு. வ. ஆகியவர்களின் சிந்தனையில் முகிழ்த்த புத்தம் புதிய நூல்களையும் கசடறக் கற்றிருக்கவேண்டும்.

இளமாணாக்கன் மேற்கூறிய நூல்களைப் பயிலுவதோடு, அறிஞர் அண்ணா அவர்களின் சொற்பொழிவு நூல்கள் அத்தனையும் திரும்பத் திரும்ப உரக்கப் படித்து வரும் முயற்சியில் ஈடுபடுவானானால், சில மாதங்களிலேயே அவன் இலக்கிய மன்றங்களில் பேசும் நிலையை எளிதில் எய்தும் எழுச்சி பெறுவான்.

எனவே, இலக்கிய மன்றங்கள் இளமாணாக்கர்க்குப் பேச்சு வன்மை வளரப் பயன்படுகின்றன; நாட்டின் நல்ல குடிகளாக மலர அவர்கட்கு வழி வகுக்கின்றன. அதனால், அச்சம் கூச்சம் திகைப்பு முதலியன அணுகவிடாமல், மேடையில் ஏறிப் பேசவிரும்பும் மாணவன், குரலினிமை சொல் திருத்தம் பொருட் பொருத்தம் முதலியன பொருந்தி எடுப்பான தோற்றத்தோடு தன் எண்ணங்களை எடுத்தியம்பிப், பிறர் உள்ளங்களைக் கவர்வதில் கருத்தூன்றுதல் வேண்டும்.

# தமிழ் உரைநடை

இறையனுரகப்பொருள் உரை தொடங்கித் தற்காலம் அறிஞர் மு. வ. அவர்கள் உரைநடைவரை, தமிழில் எத்தனையோ வகையான தமிழ் நடை தவழ்ந்துகொண் டிருக்கக் காண்கின்றோம். எனினும், மறைமலையடிகள் வரதராசனுர், அண்ணுத்துரை ஆகிய மூவர் நடை வகையை மட்டும் இக்கால இளைஞர், கருத்து ஊன்றிக் கற்றல் நன்று என்று அறிவுறுத்துகின்றோம்.

உரைநடை உயரிய முறையில் திகழ வழிகள் பலவுள. கல்லாப் பொதுமக்கள் நாவில் நடமாடுஞ் சொல் சொற் றொடர்களிற் பல, உருச் சிதைந்து ஒலி குலைந்து கொச்சை யாயிருத்தலின் நல்ல தமிழ் நடையில் தன் உள்ளக் கருத்தை வெளிப்படுத்த விரும்பும் தமிழிளைஞன், அவற்றுட் பெரும் பாலன தழுவற்பாலன அல்ல என்று பகுத்தறிந்துகொள்ள வேண்டும்.

வரவேண்டும் என்பது வரல்வேண்டும் என்று சிறு மாற்றம் பெற்று இடம் பெறின், உரைநடை சிறிது உயர்வு எய்தும். செய்யுள் வரிகளிற் சிற்சில ஆங்காங்கே பொருத் தமான இடமறிந்து கையாளப்படின், உரைநடை இன்னும் சிறிது உயர்வு எய்தும். பொது வழக்கிலுள்ள சொற் சொற் றொடர்கள் விகுதி நீங்கியும் நீண்டும் திரிந்து, வரையப் படின் உரைநடை பின்னுஞ் சிறிது உயர்வு எய்தும்.

உருவகம் முதலிய அணி வகைகள் இடையிடையே விரவி வரின், உரைநடை தனியுயர்வுடன் இலங்கும். "உணவு கண்முன் ஊசலாடுகிறது என்ற உவகையுடன் துள்ளிக் குதிக்கும் மீனுக்குத் தூண்டிலே தூக்குமரமாகிறது. அதுபோலக் கலையழகு காண்போம் என்று எண்ணிப் பழமை முன் கூத்தாடும் தமிழர், ஆரிய ஆதிக்கத்திலே சிக்கிவிடுகின்றனர்" என்பது அறிஞர் அண்ணா அவர்களின் அழகு நடை.

அளபெடைகளும் தன்மைப் பன்மை வினைகளும் விரவி வருமாறு எழுதுவதும் நடையுயர்வுக்கு இயைவதேயாகும். ஆசிரியர் மறைமலையடிகள், பரிதிமாற் கலைஞர் இன்னபிறர் உரைநடை நூல்களில் இதனைக் கண்டு அறிந்து கொள்ளலாம். நிற்க,

வரதராசனாரின் தமிழ்நடை, கற்பவர் அறிவைப் பற்றிச்சென்று அமைதியாய் நடக்கின்றது. அண்ணாவின் தமிழ்நடை, படிப்பவர் உணர்வை ஈர்த்துச் சென்று ஆரவாரமாய் நடக்கின்றது. மறைமலையடிகளின் தமிழ் நடை, பயில்பவர் அறிவையும் உணர்வையும் தம்வயமாக்கிச் சென்று பெருமிதமாய் நடக்கின்றது.

"இளைஞர்களின் வாழ்க்கையில் ஒரு குறிக்கோள் இருக்கவேண்டும். வாழ்க்கையில் ஒரு பொழுதுபோக்கு இருக்கவேண்டும். ஒரு வெறி—கட்சி வெறி அல்லது சமய வெறி இருந்தாலும் மேலானதே. வெளியுலகத்தில் ஒரு போராட்டம் இருக்கவேண்டும். இல்லையானால் இளமை எண்ணங்கள் சும்மா இருக்கமுடியாது. நாடி நரம்புகளின்

ஆசையைப் பற்றி அலைந்து உடலைக் கெடுத்துவிடும். அந்த ஆசைக்கு இடமில்லாமல் இருபது இருபத்தைந்து வயது இளைஞன் இருக்கவேண்டுமானால், ஒரு குறிக்கோள் ஒரு வெறி இருந்து வெளியுலகம் அவனைக் கவரவேண்டும். இவற்றுள் ஒன்றிலும் மனம் பற்றாத இளைஞனாக இருந்தால் பேசாமல் பெற்றோரே பார்த்துத் திருமணம் செய்துவிட வேண்டும்." "அல்லி" பக்கம் 118. மு. வ.

"மக்களுக்குள் சாதியைக் கற்பித்துப் பேதத்தை உண்டாக்கும் ஏற்பாட்டை மதம் என்றும் மாண்புடையதென்றும் கூறி அதனைக் கண்டித்தலே மகாபாவம் என்று மிரட்டினால், எதற்கும் காரணம் கேட்கும், எதையும் ஆராய்ந்து பார்க்கும் இந்தக் காலத்திலே யார் மருளுவார்கள்? அதிலும், உருவமற்ற ஆண்டவனை உள்ளன்போடு வணங்கி ஒருவரையொருவர் தாழ்த்தாமல் ஒன்றே குலம் என்ற தத்துவத்தோடு வாழுகின்ற இசுலாமியர்களைக் கண்ட பிறகு, ஆண்டவன் சந்நிதியைக் கள்ளர்குகை ஆக்காதீர்கள் என்று பூசாரிகளைக் கடிந்துரைத்த ஏசுநாதரின் வரலாற்றைப் படித்த பிறகு, புனிதமான எண்ணமும் நிராசையும் தேவையே தவிர, நீரில் மூழ்குவதும் நீண்டதூரம் செல்வதும் ஆரியப் புரோகிதரின் ஆணைக்கு அடங்குவதும் ஆண்டவனை அடைய மார்க்கங்கள் அல்ல என்ற அறவுரையைச், சுகபோகத்தைத் துறந்து ஆரணியத்தில் அலைந்து அறிவின் எல்லையைக் கண்டு அவனிக்கு எடுத்துரைத்த புத்தபிரானின் வரலாற்றைப் படித்த பிறகு, எப்படி நம்முடைய பழைய கால ஏற்பாடாகிய, பார்ப்பனீயப் பலிபீடமாகிய இந்து மதத்தை ஏற்றுக்கொள்ள முடியும்?"

மறுமலர்ச்சி: பக்கம் 18. அண்ணா.

அழகில் மிகச் சிறந்தவளாகப் புராண நூல்களால் நுவலப்படும் மேனகை என்னுந் தேவ மாதுக்கும், தவத்தான் மனந்தூயராய்ச் சுடரொளி வீசும் விசுவாமித்திர முனிவர்க்கும் புதல்வியாய்ப் பிறந்த சகுந்தலை அழகிற் குறைந்தவளாயிருத்தல் கூடுமோ? அல்லிக்கொடியில் கவின் கெழுமிய அல்லி மலரல்லாற் பிறிதொன்று உளதாமோ? பொன்னொளி திகழும் மடமான் வயிற்றில் மின்னொளி துலங்கும் பெடைமான் கன்றன்றிப் பிறிதொன்று பிறக்குமோ? நீலமும் பசுமையுஞ் சாலக் கலந்த கோலக் கலாவ மஞ்ஞைக்கு, ஆலுந்தோகை அழகிய மயிலல்லது ஏலப் பிறப்பது இனி வேறுண்டோ? இருந்தவாற்றால், மாதரின் எழில் நலங்களை யெல்லாம் ஒருங்கு கூட்டித் திரட்டிச் சகுந்தலையின் வடிவழகை இறைவன் படைத்தனன் என்றே அறிதல் வேண்டும்.

சாகுந்தல நாடக ஆராய்ச்சி

மறைமலையடிகள்.

# இலக்கிய நடை

உடம்புறப்புக்களை நூலால் ஆகிய உடைகொண்டு புனைவது போலவே, உளக்கருத்துக்களைச் சொல்லால் ஆகிய நடைகொண்டு அணி செய்கின்றோம். ஒவ்வொருவர்க்கும் பணவசதி, உடலளவு, மனப்பான்மைகளுக்கு ஏற்ப உடை வகை வேறுபடுவதுபோல், நடைவகையும் அவரவரும் பெற்றிருக்கின்ற மொழித் தேர்ச்சி, வாழ்க்கைநிலை, மனப்பண்பு இவற்றின் காரணமாக மாறுபடக் காண்கின்றோம். என்றாலும், கட்டுப்பாட்டுக்குட்பட்ட போர்வீரருஞ் சாரணரும் சீருடை அணிதல்போல, நஞ் சங்கத் தமிழ்ப் புலவரும் நடை பெரிதும் வேறுபடாத நற்றமிழ்ப் பாக்களை ஆக்கித் தந்திருப்பதும் நாம் அறிவோம்.

நடை என்பது எழுதும் வகையே ஆகும். இலக்கிய ஆசிரியர், தம் எண்ணங்களைத் தமக்கே உரிய தனித்த முறையில் சொற்களால் வெளிப்படுத்துவதே இலக்கிய நடை எனப்படும். குன்றக் கூறல், மிகைபடக் கூறல், கூறியது கூறல், மாறுகொளக் கூறல், வழூஉச் சொற் புணர்த்தல், மயங்க வைத்தல், வெற்றெனத் தொடுத்தல் மற்றொன்று விரித்தல், சென்று தேய்ந்திறுதல், நின்று பயனின்மை முதலிய பத்துக் குற்றங்களும் விரவாமல், சுருங்கச் சொல்லல், விளங்க வைத்தல், நவின்றோர்க் கினிமை, நன்மொழி புணர்த்தல், ஓசையுடைமை, ஆழமுடைத்தாதல், முறையின் வைப்பு, உலக மலையாமை,

விழுமியது பயத்தல், விளங்கு உதாரணத்தது ஆதல் முதலிய பத்து அழகுகளும் பொருந்தித், தித்திக்குஞ் செந்தமிழில் எழுதப் படுவதே சிறந்த இலக்கிய நடை.

கருத்துக்களை நல்ல நடையில் வெளிப்படுத்த விரும்பும் இளந்தமிழ் மாணுக்கன், இங்கு நாம் சொல்வதை நெஞ்சில் நிறுத்த வேண்டும். ஒரு சொற்பொழிவாளன், பென்னம் பெரிய மனிதர்பால் பேசுவது போலவே, சின்னஞ் சிறிய பிள்ளைகளிடம் பேச முற்பட்டால், அவர்களுக்கு அவன் பேசுங் கருத்துக்களுஞ் சொற்களும் யாங்ஙனம் புரியும்? இரங்கற் கூட்டம் ஒன்றில் உரையாற்றுவோன் நகைச்சுவை ததும்ப மொழிந்தால், அவன் சிறந்த பேச்சாளன் ஆகுவனோ? காலம், இடம், எடுத்த பொருள் இவற்றிற்கு இசைய எண்ணங்களை வெளிப்படுத்த வேண்டிய சொற்பொழிவாளன், எவ்வளவு விழிப்புணர்ச்சியுடன் இருத்தல் வேண்டுமோ, அவ்வளவு விழிப்புணர்ச்சியுடன் தான், மொழிப் பயிற்சியில் தேர்ந்த இலக்கிய ஆசிரியன், தன் எண்ணங்களை எழுதிக் காட்ட முற்படும்போதும் இருத்தல் வேண்டும்.

இளமாணுக்கன், மிகவுயர்ந்த வரைவாளரது உரை நடையைக் கற்கத் துவங்குங்கால், அப்படியே அதனைப் பின்பற்ற முற்படுவது நன்மையாய் முடியாது. மற்றுச் சிறந்த வரைவாளர் நடையிற் காணும் தனித்த இயல்புகள் எவை என்று பகுத்துக் காண்பதிலும், அன்னார், தம் எண்ணங்களை எவ்விதம் எடுத்துரைக்கிறார்கள் எனப் பிற வரை

வாளர் நடையிலிருந்து பிரித்துக் காண்பதிலும் ஆர்வங் காட்டவேண்டும். அல்லாமலும், நாமும் நல்ல நடையில் நம் கருத்துக்களைப் புலப்படுத்துவோம் எனத் தட்டுத் தடு மாறி அணிவகைகளும் அருமைப் புணரியலும், நெடு வாக் கியங்களும் திரி சொற்களும் அளபெடைகளும் பிறவும் விரவுமாறு வலிந்தெழுத முயல்வது நன்றன்று. அஃது இயற்கையாயமைந்த முகத்தை வண்ணப்பொடி பூசி மினுக் குவது போல்வதாகும்.

எனவே, எண்ணங்கள் தெளிவாகவும் திட்பமாகவும் அமைந்திருந்தால், மொழியிலே ஒருவன், நிறைந்த பயிற்சி யும் தேர்ச்சியும் வாய்ந்திருந்தால், அவன் மனம், தூய்மை யும் துலக்கமும் பெற்றிருந்தால், அவன் எழுதும் இலக்கிய நடை இயல்பாகவே நன்கனம் அமையும் என்று சொல்ல லாம். வாழ்க்கையில் ஒருவன் கொண்ட கொள்கை கோட் பாடுகளுக்கு ஏற்பவும், அடைந்த அறிவு ஆராய்ச்சிகளுக்கு இயையவும், பெற்ற பண்பு பழக்க வழக்கங்களுக்குப் பொருந்தவும் அவன் எண்ணங்கள் வெளிப்படும் ஆதலின் இலக்கிய நடையும், ஆசிரியன்மார் தன்மையைத் தாமே புலப்படுத்தும் என்றே கூறலாம்.

இனிக், "கருதும் பொருளை மருளற விளக்கும் தெளிவு நடை எதற்கும் பொதுவுடைமையாகும். சொற் களின் உருவமும் முடிபும் பிறழாது அமைதலும் பேணல் வேண்டும். மரூஉச் சொல் ஆட்சியை மறுப்பாரில்லை. ஆன் றோர் வழக்கும் அறிஞர் ஆட்சியும் பெற்றவை அனைத்தும்

நற்றமிழ் ஆகும். மற்றிடத் தெல்லாம் சொல் உருவோடு பொருள் முடிபின் அடைவும் போற்றுதல் வேண்டும். கொச்சை வழக்கு எதுவும் கொள்ளல் கூடா. எடுத்துக் காட்டினும் நாடக வழக்கினும் இயைபும் தகுதியும் நோக்கி இழிவழக் கொழித்து ஏற்பன ஏற்புழி அருகி வழங்கல் பிழை ஆகாது, அங்கும் அதனைப் பெருவழக் காக்கும் பிழையைக் காத்தல் யாவர்க்கும் கடனும். யாண்டும் ஐயமும் திரிபும் அகற்றல் வேண்டும். ஆரியம் போன்ற பிற பல மொழிகளில் செயற்கை விதிகள் திகைக்கச் செய்யும் தமிழில், ஒலியியல் நிலையே உதவு கோலாகப் புணர்ச்சி விதிகள் அமைவதை அறியலாம். வல்லொற்றிரட்டலும் நிற்கும் மெய்மேல் வரும் உயிர் ஏறலும், எல்லா மாந்தரும் கல்லாது சொல்லுவர், இயற்கையொடு முரணி வெறுக்க விட்டிசைக்கும் எழுத்துப் புணர்ச்சியும் பிரிப்பும் வழுவாம்." இவையே நல்ல இலக்கிய நடைக்கு இன்றியமையாத பண்புகள் என்று நற்றமிழ் நாவலர் ச. சோமசுந்தர பாரதியார் நவில்கின்றார். நிற்க,

இனிய இலக்கிய நடை கைவரப்பெற வேண்டுமானல் சிந்தனை செய்யுங் கருத்துக்கள் ஒழுங்காக அமைதல் வேண்டும். கருத்துக்களை வெளிப்படுத்துதற்கு வாய்க்குஞ் சொற்கள் பொருத்தமாக இருத்தல் வேண்டும் இன்னும், நல்ல மொழி நடையில் உள்ளக் கருத்தை விள்ள விரும்பும் தமிழினைஞன் திரி சொற்களைப் பெரிதுங் கலவாமல் ஒதுக்கித் தெரி சொற்களையே தழுவிக் கொள்ள வேண்டும். நெடுவாக்கியங்களைப் பெரிதும் விரவாமல் விலக்கிக்

குறுவாக்கியங்களையே ஆக்கிக்கொள்ள வேண்டும். எதை யும் சேம்பங் குழம்புபோல் வழவழா கொழகொழா என்று இயம்பாமல், பட்டுத் துணியைக் கத்தரித்தாற்போல, வெட்டொன்று துண்டிரண்டென்று அறைதல் வேண்டும்.

இவற்ருேடு இனிய நல்ல தெளிதமிழ் நடையில் அமைந்த விழுமிய நூல்களைக் கசடறக் கற்றுவரும் பயிற் சியில் இடைவிடாது நின்ருல், மாணுக்கன் தானும் முயற் சியால் முன்னேறி முதன்மையான வரைவாளனுகத் தன் பின்றைக்கால வாழ்வில் மலர்ந்து, ஏறுபோல் பீடுநடை யுடன் எழுச்சியோடு உலாவ முடியும். இலக்கிய நடைப் பகுதிகளிற் சிறந்தன சில எடுத்துக் காட்டுக, எனின் கீழ்க் காண்மின்:—

"மலைகளோடு சேர்ந்தும் தனியே சிறந்தும் விளங்கும் அடர்ந்த காடுகள் வெயில் குறைக்கும் காரிருள் நிழலும், வண்டு துவைப்பத் தேன் பிலிற்றும் பூங்காவனங்களினின் றும் கமழும் நறுநாற்றமும், வான் பரந்த பொழில்களின் தொகுதியும், கான் பரந்த தூறுகளின் துதைவும், பசுஞ் செடிகளின் ஈட்டமும், கொழுங் கொடிகளின் பின்னலும் உள்ளத்தைக் குளிர்விப்பன அல்லவோ? வான் முகடுகளி னின்றும் முடுகி இடியென எழுந்துவீழுஞ் சாரல்களின் விரைவும், பரலையும் அறலையும் அரித்து அரித்துப் பளிங்கு உருகிப் பாயுமாபோல் இழிதரும் அருவிகளின் முழக்கமும், பாட்டெனப் பரந்து செல்லும் ஆறுகளின் அணியும், வேறு பல நீர்நிலைகளின் பரவலும் உரை கடந்த அகச் செவிக்கு இன்பூட்டுவன அல்லவோ? பாலியும் பெண்ணையும் காவிரி யும் கொள்ளிடமும் வைகையும் பொருநையும் அகில்தாங்கி,

மணி கொழித்து அதிர்ந்தோடும் அழகை எழுத்தால் எழுத முடியுமோ? இவ்வாறுகள் பாய்ந்து வளஞ் செய்யும் வயல்களின் செழுமையைச் செப்பவும் வேண்டுமோ? வயல்களின் பரந்த பசுமை பசுங்கடல் நினைவையன்றோ ஊட்டுகின்றது? மருதத்துக்கே உறையுளாய் நன்னிலங் கொண்ட தஞ்சாவூரையும் திருநெல்வேலியையும் வாய்க்கப் பெற்ற பெருமை நந்தமிழ்நாட்டிற்கே உண்டு. இத்தமிழ்நாட்டின் வரம்பில், மணியுந்தித் தரங்கம் பாடும் பாட்டுக்கு என்றுதல் ஒய்வுண்டோ? —திரு வி. க.

ஆண்டுக்கொருமுறையேனும் குளிர்ந்த மலைகளிற் சில காலம் வசித்துத் தளர்வுற்ற உடலைத் தேற்றக் கருதிய கால்டுவெல் ஐயர், குற்றால மலையின் பெருமையைக் கேள்வியுற்றுச் சாரற் காலத்தில் அங்குச் சென்றார். மஞ்சுதோய உயர்ந்த திரிகூட மலையின் செழுமையையும், கருமலையில் வெள்ளருவி கறங்கி வழிந்து இறங்கும் காட்சியையும், சஞ்சீவி முதலாய விஞ்சை மூலிகையின் மணங்கமழ்ந்துலாவிய மந்தமாருதத்தின் மென்மையையும், செழுங்கனி தூங்கும் மரங்களில் வானரங்கள் மந்தியொடு கொஞ்சும் மாண்பினையும் கண்டு நெஞ்சம் தழைத்த கால்டுவெல் ஐயர், மூன்று மாதகாலம் ஆண்டுறைந்து முற்றிய இன்பமுற்றார். ஆயினும், சாரற் பருவம் கழிந்த பின்னர், குற்றால மலையில் மலைக் காய்ச்சல் முதலிய தொத்து நோய்கள் தொடரக் கண்டு அம்மலையை விட்டகன்றார். — சேதுப்பிள்ளை.

ஆசிரியர் திரு வி. க., சேதுப்பிள்ளை ஆகியோர் வரைந்த இனிய இலக்கிய நடைப் பகுதிகள் இங்கெடுத்துக் காட்டப்பட்டன. இளமாணவர் இவற்றின் இயல்பறிந்து பயன் கொள்ளல் வேண்டும்.

# உரைப் பாட்டுநடை.

மொழித் தேர்ச்சியெய்திய புலவர் பெருமக்களால் கையாளப்படும் மொழிநடையை, ஆசிரியர் தொல்காப்பியர் செய்யுள் என வகுத்தோதினார். செய்யுள், எழுவகைப் படும்; அவற்றுள், அடியின் சிறப்பினால் பாட்டென்று பாராட்டப்படும் செய்யுள் வகையே பாநடை. மற்ற நூலும் உரையும் பிசியும் வாய்மொழியும் அங்கதமும் முது மொழியும் ஆகிய அறுவகைச் செய்யுளும் உரைநடை.

இனி, அடிவரையறவும் ஓசை நிறைவுங் காரணமாகவே, பாநடை, உரைநடையினின்றும் பிரிந்தினிது விளங்குகின்றது. இன்னுஞ், சின்மென்மொழி, செய்யுள் மொழி, இழுமென்மொழி, தெரிந்தமொழி, குறிப்பு மொழி, எனவருந் தொடர்களை நினைக்குங்கால், பாட்டிற் பயிலுஞ் சொற்கள் தனிச் சிறப்புடையவை என்று நாம் அறிகின்றோம்.

பாட்டுநடை, உரைநடையின் வேறுபடினும், உரைப் பாட்டுநடையைக் கையாளும் அறிஞர்களும் இருக்கின்றார்கள். நற்றமிழ்வல்ல நக்கீரர், இறையனாரகப்பொருளுக்கு வரைந்தவுரை, செய்யுட்சுவை துளும்பி வழியும் உரைப் பாட்டுநடையாம் என்று அறிதல் வேண்டும். அந்த நடை, "நெகிழவேண்டும் பதத்து நெகிழ்ந்தும், இறுகவேண்டும் பதத்து இறுகியும், நல்லிசைப் புலமை மலிந்த செய்யுட் போல், நகை, அழுகை, இழிபு, வியப்பு, அச்சம், பெரு

மிதம், வெகுளி, உவகை என்னும் எண்வகை மெய்ப்பாடு தோற்றுவிக்கும் எண்வகைச் சுவை வாய்ந்து" செல்கின்றது. "அதுவேயும் அன்றி, அவைக்களத்தே கேட்டார்ப் பிணிக் குந்தகைத்தான பேருரை நிகழ்த்தும் பேராற்றல் வாய்ந் தோர் தாங்கூறும் பொருளை வினாவும் விடையுமாய் வைத்துத், தருக்க நூன்முறை வழாது தொடர்புபடுத்து விளக்கிச் செல்லுமாறுபோலவும், சொல்லையும் பொருளை யும் அடுக்கடுக்காய் நுவன்று நகை வேண்டும்பொழுது நகையும், அழுகை வேண்டும்பொழுது அழுகையும், இழிபு வேண்டும்பொழுது இழிபும், வியப்பு அச்சம் பெருமிதம் வெகுளி உவகை என்பன வேண்டும்பொழுது அவ்வம் மெய்ப்பாடுகளுங்கிளர்ந்து தோன்றுமாறு சொன்மாரி பொழிந்து நிகரின்றிச் செல்லுமாறுபோலவும் ஆசிரியர் நக்கீரனார் உரையின் அமைப்புப் பொலிந்து திகழ்கின்றது".

"ஆயத்திடை மேனாட் பிரிந்து பயின்று அறியாதாள் தமியளாய் நிற்குமோவெனின், நிற்கும்; தான் பயின்ற இடம் தன் ஆயத்தினோடு ஒக்குமாகலான் என்பது. யாங்ஙனம் நிற்குமோவெனின், சந்தனமும் சண்பகமும் தேமாவும் தீம்பலவும் ஆசினியும் அசோகமும் கோங்கும் வேங்கையும் குரவமும் விரிந்து, நாகமும் திலகமும் நறவும் நந்தியும் மாதவியும் மல்லிகையும் மௌவலொடு மணங் கமழ்ந்து, பாதிரியும் பாவைஞாழலும் பைங்கொன்றை யொடு பிணியவிழ்ந்து, பொரிப்புன்கும் புன்னாகமும் முருக் கொடு முகைசிறந்து, வண்டறைந்து, தேனார்ந்து, வரிக் குயில்கள் இசைபாடத், தண்டென்றல் இடைவிராய்த் தனியவரை முனிவு செய்யும் பொழிலது நடுவண், ஒரு

மாணிக்கச் செய்குன்றின்மேல், விசும்பு துடைத்துப் பசும் பொன் பூத்து வண்டு துவைப்பத் தண்டேன் துளிப் பதோர் வெறியுறு நறுமலர் வேங்கை கண்டாள்; கண்டு பெரியதோர் காதல் களிகூர்ந்து தன் செம்மலர்ச் சீறடிமேற் சிலம்பு கிடந்து சிலம்பு புடைப்ப, அம்மலரணிக் கொம்பர் நடை கற்பதென நடந்து சென்று, நறைவிரிவேங்கை நாண் மலர் கொய்தாள்; கொய்தவிடத்து, மரகதமணி விளிம் படுத்த மாணிக்கச்சுனை மருங்கினதோர் மாதவி வல்லி மண்டபத்துப், போதுவேய்ந்த பூகாறு கொழுநிழற்கீழ்க் கடிக்குருக்கத்தி கொடிப் பிடித்துத் தகடுபடு சிகரங்களின் முகடுதொடுத்து ஞான்று வந்து இழிதரும் அருவி, பொன் கொழித்து மணிவரன்றி மாணிக்கத்தொடுவயிரம் உந்தி அணிகிளர் அருவி ஆடகப் பாறைமேல் அதிர்குரல் முரசின் கண்இரட்ட, வண்டுந் தேனும் யாழ்முரல, வரிக்குயிலுங் கிளியும் பாடத், தண்டாது தவிசுபடப் போர்த்ததோர் பளிக்குப் பாறை மணித்தலத்துமிசை, நீல ஆலவட்டம் விரித்தாற்போலத் தன் கோலக்கலாவங் கொள விரித்து, முளையிள ஞாயிற்று இளவெயில் எறிப்ப ஓர் இளமயில் ஆடுவது நோக்கி நின்றாள்"—என்பது இறையனாரகப் பொருள் உரைநடைப் பகுதி.

கலைத்திறன் என்பது ஒருவனுக்கு இயல்பாகவே அமைந்திருக்கவேண்டும். அஃது அவன்றன் பயிற்சியி ஞலும் முயற்சியினாலும் மேன்மேல் வளர்ந்து நிறைந்திருக்க வேண்டும். இதனாலன்றோ, அஃது இயற்கையின் பரிசு எனவும், கருவில் திரு எனவும், கடவுள் அருள் எனவும்

புலமக்கள் பொதுமக்கள் முதலான எல்லாராலும் புகழப் படுகின்றது.

இனி, ஓவியக் கலைஞன் ஒருவன், தனக்கு இயல்பா யமைந்த அந்தக் கலையை ஓவாது உழைத்து வளர்த்து வருவானுனல், அவன் பிற்காலத்தில் நற்புகழ் பெறுகிறுன். என்றாலும், பொதுவாக, அவன் வரையும் கையெழுத்து அவ்வளவு திருத்தமான வடிவுடன் திகழ்வதில்லை. இவ் வண்ணமே, இசைக் கலைஞன் ஒருவன், தனக்கு இயற்கை யாய் வாய்த்த அந்தக் கலையை, இடைவிடாதுழைத்து வளர்த்து வருவானுனல், அவன் தன் வாழ்வில் புகழும் பொருளும் நிரம்பப் பெறும் நிலையை எய்துகிறுன். என்றாலும், பொதுவாக, அவன் ஒரு செய்யுளை இசையின்றிப் பாடினுல் அஃது இனிமையாயில்லை.

ஆனுல், ஓவியக் கலையறிவு கருவிலே பெற்றிருந்த சிலர், அதிற் கருத்தூன்றி அதை வளர்க்க அரும்பாடு படாமல், நிரம்ப எழுதுவதிலேயே நினைவழுந்தி நிற்பார் களாயின், அன்னுர் கையெழுத்துத் திருத்தமும் அழகும் வாய்ந்து இனிய வடிவில் திகழக் காண்கின்றோம். இங்ஙனமே, இசைக் கலையறிவு இயற்கையாய் வாய்க்கப் பெற்றிருந்த சிலர், அதில் ஆர்வத்தோடு முயன்று முன்னேறுமல், மேடைப் பேச்சிலேயே முனைப்புடையவர் களாயிருப்பார்களாயின், அன்னுர் பேசும் பேச்சும், இடை யிடையே மேற்கோளாயெடுத்துப் பாடும் பாட்டும், அவை இசை பொருந்தியன அல்ல எனினும், மிக்க இனிமை மேவிக்கேட்டார்ப் பிணிக்குந் தகையவாய்ப் பொலிகின்றன.

மொழிநடையிலும், பாட்டியற்றும் உணர்வு நிலை நிரம்ப வாய்ந்த அறிஞர், தம் காலத்து மக்கள் உரைநடை நூல்களையே பெரிதும் விரும்புகின்றார் என்று தெரிந்தும்; தமது மொழியில் தகுதியான உரைநடை நூல்கள் மிகுதியான அளவில் இல்லை என்று தெரிந்தும்; தாமும் தமது இயல்பிற்கிசைந்த செய்யுள் நடையில் தமது அரிய பெரிய கருத்துக்களை வெளியிடுவதை மாற்றி, அவற்றை உரை நடையிலேயே முழுதும் வெளிப்படுத்த முனையும்போது அவர்களது கருத்துக்கள் உரைப் பாட்டுநடையாய் மலர்கின்றன. தமிழ் மொழியில் உரைப் பாட்டுநடையைக் கையாண்டு, மொழிநடையில் புரட்சியுண்டாக்கியவர் இருவர்; முன்பு, மறைமலையடிகள்; இன்று அறிஞர் அண்ணா.

வண்மையுண்டு, வகையான திட்டங்களை வகுத்துக் காட்ட; முயற்சியுண்டு முக்கிய இலட்சியங்களைத் தீர்த்துக் கொள்ள; எழுச்சியுண்டு இனத்தைக் காப்பாற்ற; கிளர்ச்சியுண்டு, கடமையை நிறைவேற்ற.

...DU ARCHIVES

—அறிஞர் அண்ணா.

# இலக்கியப் படைப்பு

(முதற்பாகம்)

விலை ரூபா ஒன்று

கிடைக்குமிடம்:

**மணி நிலையம்,**
வேம்படித் தெரு,
திருநெல்வேலி நகர்.